14ஆவது வருடத்தில்....

# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059    416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை    மாதமிருமுறை    இலவசம்



வெளிவருகின்றது

உலகத் தமிழோசை

7வது இதழ்

சிறப்பு விலை


$1.50 மட்டுமே



வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)



HomeLife / GTA Realty Inc.

1711 Mccowan Rd. suite #206, Toronto

Direct: 416.315-9397

OFFICE: 416.321-6969

*Sales Agents Welcome*




நதி 14    April 01, 2004    பாலம் 07


## உயிர்த்தஞாயிறு

*ஜேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள்*





## சித்திரைப் புதுவருடம்

*தமிழ் தாரண*
*வருடப்பிறப்பு*
*ஏப்ரல் 13 ஆம் திகதி*




## APRIL FOOLS!

### *ஏப்ரல் 1ஆம் திகதி*



## இது முட்டாள்கள் தினம்

*இன்று முட்டாள்களை எண்ணிக் கணக்கெடுத்தால்*
*மீதியுள்ளவர்களெல்லாம் அறிவாளிகளே!*
*எண்ணும் போது உங்களில் ஆரம்பியுங்கள்!*

*ஆசிரியர் - உங்களைப் போன்ற முட்டாள்களுக்கு படிப்பிப்பதை விட நான் வேறு தொழில் செய்யலாம்.*

*மாணவன் - சேர்! அறிவாளிகள் ஏன் உங்களிடம் படிக்க வரப்போகிறார்கள்.*

*உனது வாழ்வில் முட்டாள்கள் அறிவாளிகள் ஆகிய இருவருடனும் பழக வேண்டியுள்ளது. அறிவாளிகள் யாரென்று தெரியும் போது உன்னோடு பழகிய முட்டாள்கள் யாரென்று தெரியும். ஆனால் சிலவேளைகளில் சிலருக்கு அறிவாளிகளுடன் பழக சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.*


*****

*மடையன் பேரோடு சேரும் பிராணி மகிமை நிறைந்த நல்ல பிராணி நெருப்பிலிட்டால் மணக்கும் பிராணி நேராச் சொல்வீர் என்ன பிராணி?*    *சாம்பிராணி*

**************

## நேர மாற்றம்


### ஏப்ரல் 3ஆம் தகதி







## துரித பணமாற்றுச் சேவை



வவுனியா -கொழும்புச்
சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை
ஆகிய இடங்களுக்கும்
கடுகதியில் பணம்
அனுப்புவதற்கு

**மு. காசிப்பிள்ளை & சன்ஸ்**

416.267.8221



**Singapore Communication**

Since 1991

FAMILY PLAN $60.00/ M/ 2PHONES

- 300 mins Daytime to share
- Evenings & weekend free
- Between the members Unlimited
- Buy one phone as low as 24.99 & 2nd Free*

**$40.00/ M**

350 Mins Daytime Free
Evenings & Weekends Free
V/ M, C/ C & C,W Free Come in store for more INFO

* Offer Ends Without Notice*

Buy One Accessory or Get one ½ price

More Info. Call: 416-740-5292

5010 Steeles Ave. W.,Unit 17ABC-(Kipling & Steeles)





**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

*வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.*

**ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்**

திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm

**விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்**

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro.






**Insurance & Financial Services**

Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business



416.321.1515 • 905.294.2429

4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/ Sheppard)


## அருள் விருந்து

- *ஆசைகளை அகற்றுமளவு ஒருவன் தூயவனாகிறான்.*
- *தெய்வத்தை நம்புவதால் உள்ளத்தில் உறுதியும் நேர்மையும் இயல்பாகவே உண்டாகின்றன.*
- *ஒரு நாட்டில் சட்டம் அதிகரிக்குமளவு குற்றம் செய்யும் தன்மையும் மக்களுக்குகிடையில் அதிகரிக்கும்.*
- *மண்ணுயிரின் நலத்தில் தன்னுயிரை மறந்திருக்கும் வேளையில தான் மனிதன் உண்மையாக வாழ்ந்திருக்கிறான்.*
- *வற்றாத ஊற்றாயிருந்து வழங்க வல்லது தேங்கிய மனம்; அஷ்ய பாத்திரம் என்று இயம்பப்படுவதும் அதுவே.*
- *சோம்பித்திரிபவன் சான்றோன் ஆவதில்லை. பேருழைப்புக்கிடையில் அமைதியுற்றிருப்பவன் சான்றோன் ஆகிறான்.*


**வீடு வாங்க, விற்க...**

**ரவி பரமு**

வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262-4176

OFFICE: 416.321-6969



HomeLife / GTA Realty Inc.

1711 Mccowan Rd. suite #206, Toronto



**வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு**



WALK IN DENTAL CLINIC

9.00A.M - 9.00P.M

**Dr. Iru Vijayanathan**

குடும்ப பல்வைத்தியர்

416-264-3232

3150 Eglinton Ave. E.

Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்யும் தொழிலில், வெற்றி பெற

## குறைந்த நேரத்தில் நிறைந்த வெற்றி பெற




நேரம் பறக்கிறது. இது நல்ல செய்தி அல்ல. ஆனால் அந்த நேரத்தைச் செலுத்தும் விமானி நீங்கள் தான். இது நல்ல செய்தி. அன்னை தெரஸாவிற்கும், லியோனார்டாவின்சிக்கும், விஞ்ஞானி ஆல்பர்ட் எயின்டனுக்கும் கொடுக்கப்பட்ட அதே மணித்துளிகள்தான் உங்களுக்கும் தரப்பட்டிருக்கின்றது.

**பெரி. முத்துராமன்**

நான் சமீபத்தில் படித்த ஒரு கதையை உங்களுக்குச் சொல்லப்போகின்றேன்.

ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் பலத்த வெற்றியாளர்களின் முன்னிலையில் அந்த நிர்வாகக்குரு நின்றார். "இப்போது கேள்வி நேரத்தைத் தொடங்கலாமா" என்றார். பிறகு, ஒரு பெரிய ஜாடியை எடுத்து எல்லோர் முன்னிலையிலும் மேசையில் வைத்தார். பிறகு அந்த ஜாடியில் ஒரே அளவுள்ள 12 பெரிய கற்களை ஒன்றன் மேல் ஒன்றாகக் கவன-மாக வைத்தார். ஜாடியின் விளிம்பிற்குக் கற்கள் வந்தன. அப்போது கேட்டார்," இந்த ஜாடி நிரம்பி விட்டதா?" வகுப்பிலிருந்த அனைவரும் "ஆம்" என்றனர். "உண்மையாகவா?" என்று கேட்டபடியே மேசைக்கு அடியில் இருந்த ஒரு வாளி சரளை மண்ணை எடுத்து ஜாடியில் இருந்த இடைவெளிகளில் போட்டு ஜாடியைக் குலுக்கினார். கூடியிருந்தோரைப் பார்த்து சிரித்தபடியே மீண்டும் கேட்டார், "இந்த ஜாடி நிரம்பி விட்டதா?" பதில் சொல்ல பலரும் தயங்கிய போது ஒருவர் மட்டும், "அநேகமாக இல்லை" என்று பதில் அளித்தார். "நல்லது" என்ற படியே அந்த ஜாடியில், ஒரு வாளியில் இருந்த நீரை ஊற்ற ஆரம்பித்தார்.



அப்போது கேட்டார். "இதிலிருந்து தெரிவது என்ன?" ஒருவர் கைகளை உயர்த்திய படியே பதிலைச் சொன்னார்." உங்களுடைய நேரம் எவ்வளவு தூரம் மற்ற காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தா லும், இன்னும் கூட காரியங்களுக்கு நேரத்தை ஒதுக்க முடியும்."

ஆசிரியர் மறுத்தார். "முதலில் அந்தப் பெரிய கற்களை நீங்கள் உள்ளே போடவில்லையானால் பிறகு எல்லா வற்றையுமே உள்ளே போட முடியாது." அதுதான் இதிலிருந்து தெரிய வரும் செய்தி என்றார்.



நம் வாழ்க்கையிலும் எத்தனையோ அவசர-மான நிதானமான, முக்கியமான, முக்கிய மற்ற சம்பவங்கள் நடைபெறு கின்றன. அவற்றை வேறு படுத்தத் தெரிய வில்லை என்றால்," குறைந்த நேரத்தில் நிறைந்த வெற்றியைப் பெற முடியாது."

இருதயசிகிச்சை செய்வது, உடைந்த இயந்திரத்தைப் பழுது பார்த்தல், நேரத்திற்குள் திட்டமிட்ட காரியத்தைச் செய்தல், இவையெல்லாமே அவசரமான முக்கியகாரியங்கள். முதலில் செய்யுங் கள்.

சில தொலைபேசித் தொல்லைகள், சில கூட்டங்கள் முக்கியமானவையாக இருக்க லாம். ஆனால் அவசரமானவையாக இருக்காது.

உறவை வளர்த்தல், சில பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள், திட்டமிடல் போன் றவை முக்கியமானவை. ஆனால் நிதானமாகச் செய்யலாம். வெட்டிபேச்சு, அசட்டை, வேண்டாத தபால்கள் போன்றவை அவசியமும், முக்கியமும் அற்றவை. அவசர காரியங்கள் குறுகிய காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். முக்கிய காரியங்கள் நீண்ட காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். சரியான காரியங்களைச் சரியான நேரத்தில் செய்யுங்கள்.

பரேட்டோவின் 80:20 விதி உங்களுக்குத் தெரியுமா?

80 சத வெற்றி 20 சதவீத முயற்சியிலேயே கை கூடுகின்றது. அதாவது சிறிதளவு முயற்சியே சில காரியங்களில் பெரிய அளவில் வெற்றியைக் கொடுக்கின்றது. இப்போது குறைந்த நேரத்தில் நிறைந்த வெற்றியைப் பெற மேலும் சில ஆலோசனைகளை உங்களுக்குக் கூறப் போகின்றேன்.

1. எந்தக் காரியத்தையும் திட்டமிட்டுச் செயல்படுங்கள். ஒரு காரியத்தைச் செய்யுமுன் திட்டமிடத் தவறினால், தவறுவதற்கு நீங்கள் திட்டமிடுகிறீர்கள் என்று பொருள்.

2. உங்கள் குறிக்கோளை, குறிப்பாக, அளவிடத் தகுந்ததாக, வெற்றி பெறத்தக்கதாக, இயல்பானதாக, கால அளவிற்குள் வரையறுக்கப்பட்டதாக அமைத்துக் கொள்ளுங்கள்.

3. உங்கள் நேரத்தை அளவிட்டுச் செலவிடுங்கள். முன்னர் குறிப்பிட்ட பரேட்டே விதியை நினைவில் கொள்ளுங் கள்.

4. என்னென்ன காரியங்களை, எந்தெந்த வரிசையில் செய்ய வேண்டும் என்பதை பேப்பரில் எழுதி அதன்படி செயல் படுங்கள்.

5. என்னதான் திட்டமிட்டாலும், எதிர்பாரத இடையூறுகள் வரத்தான் கூடும். அதற்கும் நேரம் வைத்திருங்கள். உங்கள் நேரத்தில் 50 சதவீதத்தை மட்டும் திட்டமிடல் சிறந்தது.

6. ஒருபோதும் பறக்கப் பறக்க வேலை செய்யாதீர்கள். ஆறுதலாகச் செய்தால் ஆறுதலைத் தரும்.

7. பூரணத்துவம் நல்லது. அதற்காகக் காரியங்களைத் தள்ளி போடாதீர்கள். பல சமயங்களில் சிறு குறைபாட்டுடன் காரியங்களை நேரத்தில் முடித்தல் நல்ல பலன்களைத் தரவே செய்யும்.

8. தள்ளிப்போடும் மனப்பான்மையைத் தள்ளிப் போடுங்கள். செய்ய நினைத்த காரியத்தை பல சிறிய கூறுகளாகப் பிரித்துக் கொண்டு, ஒரு சமயத்தில் எவ்வளவு முடியுமோ, அந்த அளவு சிறிய கூறை மட்டும் எடுத்துக் கொண்டு செயல்படுங்கள்.

9. முடியாததை ஒரு போதும் "முடியாது" என்று சொல்லத் தயங்காதீர்கள்.

10. இறுதியாக, ஒன்றில் வெற்றி பெற்றவுடன் உங்களுக்கு நீங்களே பரிசளித்துக் கொள்ளத் தவறாதீர்கள்.

ஒரே நேரத்தில் எல்லாம் நிகழ்வதைத் தடை செய்யப் பிறந்ததுதான் நேரம். உங்கள் நேரத்தை ஒழுங்கு செய்வதன் மூலம், உங்கள் வாழ்வில் நிகழக்கூடிய நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்து கொள்ள முடியும்.



## நாளையை இன்றே தொடுவோம்



* உங்கள் ஓய்வூதியத்தைப் பாதுகாக்க விரும்புகிறீர்களா?


* உங்களுக்கு பெரிய வருத்தங்கள் வருமானால் RRSP யிலிருந்து தான் வருமானத்தைப் பெற வேண்டுமா?

* பெரிய வருத்தங்கள் வருவதனாலேயே 48 சதவீட்டுக் கடன்கள் கட்ட முடியாமல் போயிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? (மரணத்தினால் 2 சத வீதக் கடன்களே கட்ட முடியாமல் போயிருப்பதாக புள்ளி விபரம் கூறுகின்றது)



உங்கள் கவலை எதுவானாலும் இலவச ஆலோசனை பெற அழையுங்கள்:
**பெரி. முத்துராமன்**, MBA, M.COM., PFPC
Financial Planner & Consultant
416-430-0623 / Cell: 416-278-2026

## HOME INSPECTION





> வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள...
> வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

நம்பிக்கையான, நவீன, நிபுணத்துவ சேவைக்கு
**ந. தயாபரன்**
Certified Inspection Specialist

*> NEW & RE-SALE HOME INSPECTIONS*
*> PROBLEM ANALYSIS & SOLUTIONS*

Expert Building Inspections LTD.

- Exceed the Standards
- Industry Canada Registered
- Professionals Serving the GTA On Site Reports.

24 / 7 - Toll Free - **1 888 373 3315**
**416.727.8336**

## ONTARIO FLOORING CO.

Free Estimate

- All types of Hardwood Floors Installed
- Old Floors Refinished
- All Workmanship Guaranteed

Over 30 years experience
Raja - 416-540-8626 Varathan - 416-267-5270



## திருமண சேவை

உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன் மணமகளைத் தெரிவு செய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள் எமது சேவையின் பலனைப் பெற்ற தம்பதிகள் பலர்/ எம்மவர்களின் தேவையே எமது சேவை.

அழையுங்கள்: 416-261-6219

Weekly After 6:00PM / Weekends Anytime




## 'நோய் நீக்கி'

8ஆம் பக்கத் தொடர்ச்சி

யோகாசனம் - உடம்பிலுள்ள பலவித எதிர்ப்பு சக்திகளையும், நாடியில்லா கோளம் ஆகியவற்றின் செயற்பாட்டை ஊக்குவித்து பல நோய்களையும் தீர்க்கலாம். சாந்தி ஆசனம், பத்மாசனம், ஹலாசனம், சர்வாங்காசனம், மத்யாசனம் முதலியவற்றை தினம் செய்து எந்த வைத்தியம் செய்யும் பொழுதும் இதையும் செய்து விரைவில் நோயைக் குணப்படுத்தலாம். அனுபவமிக்க ஆசானின் அறிவுரைப்படி ஆசனங்கள் செய்தால் நோய் விரைவில் குணமடையும்.

தியானம் - (Meditation) இந்த நோயைக்குணமாக்க ஒரு முக்கிய பயிற்சி தினம் குறைந்தது அரைமணிநேரம் தியானம் செய்தல் அவசியம். இதனால் நோய் விரைவில் குணமாகும். இது ஜீவ சக்தி தளர்த்தல் முறைப்படி (Biofeedback) கையாண்டால் நற்பலன் கிட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5,
Scarborough, ON. M1P 3A6

SPECIAL




# சுயதொழிலில் உள்ளவர்கள் வாகனம் வாங்கும் போது

*இவ்வாரம் சுயதொழில் செய்வோர் வாகனம் வாங்குவதைப்பற்றி எடுத்துக் கொள்வோம். இங்கு நான் சுயதொழில்*



*என்று கூறுவது எது என்பதை தெளிவாக்க வேண்டும். சொந்தமாக தொழில் செய்பவர்கள், கொமிசனுக்கு வேலை செய்பவர்கள், part time இல் cleaning மற்றும் தொழில் பண்ணுபவர்கள், வீட்டு மற்றும் ஏனைய பொருட்களின் விற்பனையாளர்கள் எனப் பல வகைப்படுத்தலாம். சுய தொழில் செய்பவர்கள் தங்களது செலவினங்களை வருமான வரி செய்யும் போது அதில் காட்டி இலாபமடைய முடியும். சுயதொழில் செய்பவர்கள் வாகனங்களை வாங்கும் போது, தங்கள் வாகனங்களை Lease இல் எடுப்பதன் மூலம் இலாபமடையலாம்.*

*உங்கள் வாகனங்களை Lease இல் எடுப்பதன் மூலம் மாதா மாதம் நீங்கள் வாகனத்திற்கு கட்டும் பணத்தை வருடமுடிவில் வரியில் கழித்துக் கொள்வதன் மூலம் நீங்கள் வாகனத்தை இலவசமாகவே பாவிக்கிறீர்கள் என்பதை புரிந்து கொள்வீர்கள். உங்கள் Accountant உடன் இது பற்றி அறிந்து கொள்ளலாம்.*

*மேலதிக விபரங்களுக்கு: சோதீஸ்*
*Action Honda - 416-704-1179*

**வீடு, அறை, BASEMENT வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**


# Rogers Cable

## "எம்மவர்க்கு ஒரு நற்செய்தி"

Roges Cable இனால் தமிழர்களிற்கு என Area Representative ஆக நியமித்துள்ளார்கள். **'I DO MY BEST SEE BELOW'**

- **புதிய இல்லம் செல்கின்றீர்களா?**

Cable, TV Service No Connection Fee. Basic cable Two months 1/2 Price **$11** மட்டுமே. Save upto **$120**

- **உங்கள் வீட்டில் Computer வைத்திருக்கின்றீர்களா?**

சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

Rogers Hi Speed Internet Service

1 st month free. 3 Months 1/2 Price **$24.95** only

முக்கிய கவனத்திற்கு! NO CONTRACT FOR ANYONE

*** Tamil Vision பார்க்க ஆர்வமா?**

அழைத்த அதே நாளில் உங்கள் இல்லம் வந்து இலவச இணைப்பை ஏற்படுத்தி தருகிறோம். தமிழில் தொடர்புகளுக்கு எந்நேரமும் அழையுங்கள்

**Sanjay - 416-315-2917**

comwave

*NO Contract to Sign*



*Excellent Quality, Lowest Rates Long Distance Service*




19¢ per min

Canada - 3.9¢ U.S.A - 3.9¢ U.K - 3.9¢

**Use from Home, Mobile, Office & Pay phone**

- Free Detail Monthly Statement (for income tax)
- It's not a phone (calling) card
- Free Pin Number
- No Connecting Fee
- No Activation Fee
- No Need Swich Line

| Country | Rate for per Minute Res. Phone | Mobile |
|---|---|---|
| Australia | 3.9¢ | 35¢ |
| Bangladesh (Dhaka) | 11¢ | 27¢ |
| Cambodia | 39¢ | 69¢ |
| China | 3.9¢ | 4.9¢ |
| France | 3.9¢ | 35¢ |
| Germany | 4.9¢ | 35¢ |
| Greece | 7.0¢ | 35¢ |
| Grenada | 29¢ | — |
| Hong Kong | 3.9¢ | 35¢ |
| Indonesia | 17¢ | 35¢ |
| Italy | 4.9¢ | 35¢ |
| Jamaica | 19¢ | — |
| Kenya | 29¢ | — |
| Malaysia | 4.9¢ | 20¢ |
| Nigeria (Lagos) | 11¢ | — |
| Pakistan | 29¢ | 35¢ |
| Saudi Arabia | 08¢ | 34¢ |
| Singapore | 4.9¢ | 12¢ |
| Trinidad | 25¢ | — |
| Turkey | 17¢ | 27¢ |

Many More countries Lowest Rates check with us.

**Rate Guarantee**
" If you ever find a lower rate, Just call us we guarantee to beat it"

**தமிழ் மக்களின் தொலைபேசித் திருப்தியே எங்கள் சேவை.**

Call Today your Sales Representative to Join Our best saving plan for you Tomorrow !

Ananda R. Sinnadurai, B.R.E
416•286•0282
Toll free: 1•866•389•5832 Ext. 319 Fax: 416•736•3158





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நீதிக்குத் தண்டனை



இந்த உலகில் நீதி மன்றங்கள் இல்லாது இருந்திருந்தால் மனிதர்களின் வாழ்க்கை ஆறறிவு இருந்தும் மிலேச்சத்தனமான அல்லது காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கையாகவே இருந்திருக்கும் என்று எண்ணும் வகையிலேயே, படித்தவர்கள் முதலாக பாமரர்கள்வரை பெரும்பான்மை மக்களின் நடத்தைகள் சான்றாக இருக்கின்றன. நீதி என்பது நீதி மன்றங்களில் மட்டுமே இருப்பது போலவும் சாதாரண வாழ்க்கையில் மக்கள் சரியாக சிந்தித்து நீதியாக நடந்து கொள்ள வேண்டியதில்லை என்ற வகையிலேயே மனிதர்கள் சிந்திக்கின்றார்கள் நடந்து கொள்கிறார்கள் என்பதற்கு சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

நீதியானது இனம், மதம், குலம் மொழி போன்றவற்றிற்கு அப்பாற்பட்டது. எல்லோருக்குமே ஒரு நீதி என்ற வகையிலேயே நீதி தேவதையின் கண்கள் கட்டுப்பட்டு இருப்பதாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றது. உலகின் தலை சிறந்த ஜனநாயகத்தை கொண்டிருக்கும் அமெரிக்காவின் உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தவர் Harold Bain என்பவர். அவர் நீதிபதியாக இருந்தவர் என்று மக்களுக்கு தெரிய வந்ததே 1994 ஆம் ஆண்டு Los Angel



நகரில் நடைபெற்ற O.J. Simpson மீதான கொலைவழக்கின்போது தான். ஆபிரிக்க இனத்தைச் சார்ந்த புகழ் பெற்ற American Foot Ball விளையாட்டு வீரராக இருந்து NBC தொலைக்காட்சியின் விளையாட்டு துறை ஒளிபரப்பாளராக வேலை செய்து கொண்டு இருக்கும் வேளையில் மனைவியாக இருந்து பின் தன்னை விட்டு பிரிந்து வாழ்ந்த Nicole Simpson என்ற பெண்ணை கொலை செய்ததாக தொடரப்பட்ட வழக்கு வாதத்திற்கு வந்த போது தான் CNN தொலைக்காட்சியில் சட்ட ஆலோசகராக இருந்து O.J Simpson ற்கு தண்டனை வழங்க வேண்டும் என்பதில் படுதீவிரமாக இருந்தவர். கொலை செய்யப்பட்ட Nicole, காக்கேஷியன் என்றழைக்கப் படும் வெள்ளையர் இனத்தை சார்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

O.J குற்றவாளியாக காண போதிய ஆதாரங்கள் இருந்தும் லாஸ் ஏஞ்சல்ஸ் (La Police Department) இன் துப்பறிவு பிரிவில் கடமை புரிந்த மார்க் ஃபேர்மன் (Mark Ferman) என்ற துப்பறியும் நிபுணர் கிடைத்த ஆதாரங்களை பலமாக்கும் நோக்கத்துடன் O.J யிடம் இருந்து பரிசோதனைக்காக எடுக்கப்பட்ட இரத் தத்தை கொலை நடந்த இடங்களில் தெளித்ததாகவும். கொலை செய்யும் போது O.J அணிந்து இருந்த கையுறைகளில் ஒன்றை கொண்டு வந்து O.Jயின் வீட்டுவளவில் போட்டு ஜோடனை செய்ததாகவும் சந்தேகிக்கப் பட்டது. கொலை செய்ய உப யோ கித்த கத்தியையே படு ஒளிப்பாக கவனமாக ஒளித்த O.J இப்படி கவலையீனமாக நடந்து இருந் திருக்க மாட்டான் என்றும் எண்ணப் பட்டது. L.A.P.D. இப்படி எத்தனை பேரின் வழக்கு களை ஜோடித்து குற்றவாளிக ளாக்கி கூண்டில் தள்ளி இருப்பார்கள். அதுவும் கறுப்பு இன, ஸ்பானிஸ் இனமக்கள் இனத்துவேசத்தால் எவ்வாறு பாதிக்கப்பட்டு இருப்பார்கள் என்பதற்கு உதாரணமாக அந்த வழக்கு விளங்கியது. பண பலம் இருந்த O.J நல்ல வழக்கறிஞர்களை வைத்து வாதாடி வழக்கில் இருந்து விடுபட்டான். அந்த வேளையில் முன்னாள் நீதிபதி Harold, O.J ஐ குற்றவாளியாக காணாத நீதிமன்றத்தைச் சிலாகித்தார்.

அண்மையில் மார்த்தா ஸ்ருவர்ட் (Martha Stewart) என்ற பெண்மணி, பங்கு சந்தையில் ஊழல் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டு குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டார். வறிய குடும்பத்தில் பிறந்த மார்த்தா தனது கடுமையான உழைப்பால் கோடீஸ்வரியானவர் என்று பொதுவாகத் தெரிந்த போதும் கோடீஸ்வரியாவதற்கு அவர் வந்த பாதையில் கணவன் முதலாக நண்பர்கள், உறவினர்களின் வெறுப்பை சம்பாதிக்கும் வகையில் கழுத்தறுப்புக்கள் செய்தும், நான் என்ற மமதையுடன் நடந்து கொண்டவர் என்றும், பொதுஜன ஊடகங்களில் நல்லவர் போல நடித்தும், பண பலம் உள்ளவர்களை சந்தோசப்படுத்தியும் தன்னை உயர் ஸ்தானத்தில் வைத்துக் கொண்டவர் என்று பல ஆதாரங்கள் இருந்த போதும், மார்தாவிற்கு தண்டனை கொடுக்க கூடாது என்று வாதாடும் மேல்தட்டு வர்க்கத்தினர்களில் முக்கியமானவர்களில் ஒருவர் இருக்கின்றார். அவர் யார் என்று எண்ணுகிறீர்கள்? O.J Simpson ற்கு தண்டனை வழங்கத் தவிக்கும் 80 வயது ஓய்வு பெற்ற முன்னாள் உயர் நீதி மன்ற நீதிபதி Harold Bain தான். மேல்தட்டு வர்க்கத்தினர் சிலருடன், பெண் விடுதலைக்காக போராடுகின்றோம் என்ற போர்வையில் சுயலாபம் அடையும் பெண்விடுதலை கூட்டத்தில் சிலரும், மார்த்தா பெண் என்ற படியால்தான் அவரை கூண்டில் ஏற்றினார்கள் என்று ஆலோலம் பாடுகின்றனர்.

மார்த்தாவின்மேல் வந்த வழக்கு என்ன வென்றால் கோடீஸ்வரியான மார்த்தா, Im Clone என்ற நிறுவனத்தின் புற்று நோய் தடுப்பு மருந்தை அமெரிக்க அரசாங்கம் அங்கீகரிக்காமல் விடப்போகின்றது என்ற உள்ளிட தகவல் களை வைத்து, செய்தி வெளிவந்ததும் விலை சரிய இருக்கும் தனது Im Clone பங்குகளை விற்று மார்த்தாவின் தரத்தில் நாற்பதாயிரம் பிச்சைக் காசுகளை காப்பாற்ற முயன்றது தான். இன்று மார்த்தா மொத்தமாக இழந்திருப்பது 500 மில்லியன் டொலர்கள். புல்லு தடக்கி விழுந்து இருக்கின்றார். 2002 ஆம் ஆண்டு அமெரிக்க அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட Im clone ஸ்தாபனத்தின் புற்று நோய் தடுப்பு மருந்தை சில தினங்களுக்கு முன்பு அரசாங்கம் அங்கீகரித்து இருப்பது சுவாரஸ்யமான செய்தியாகும்.

இந்த கதைகளில் நீதி என்னவெனில் நீதிக்கு தண்டனை வழங்கி வந்த L.A.P.D. பொலீஸ் அதிகாரிகளும்,



Martha Stewart போன்றவர்களும் நாம் தான் ராஜாக்கள், மந்திரிகள் என்று, வாழ்க்கையில் எந்த வழியிலும் எப்போதுமே வென்று விடலாம் என்று எண்ணி விடக்கூடாது. மனித மனங்களை சுயலாபங்களுக்காக வேதனைப்படுத்துபவர்கள் என்றோ ஒருநாள் பாடம் படித்தே தீர்வார்கள். இங்கு வாழும் சில தமிழ்பிரமுகர்கள் என்று உங்களை எண்ணிக் கொண்டும் நடந்து கொண்டும் மற்றவர்களின் இழப்பில், துயரத்தில் இலாபம் காணும் நீங்களும் வாழ்க்கையில் வென்று விட்டதாக எண்ணிவிடாதீர்கள். நீதி ஒருநாள் உங்களுக்கு தண்டனை தரும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

கரோல் போன்ற படித்தவர்கள் என்றால் என்ன பாமரர்கள் என்றால் என்ன எப்போதுமே நீதியாக நடந்துகொள்ள முயலுங்கள்.

பரம் ஜி.
ஒரு சாதாரணமனிதன்


**LARGE INDOOR PUBLIC CAR AUCTION**

**EVERY WEDNESDAY EVENING**
**STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM**

100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL



> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
> V.W., & OTHER FOREIGN & DOMESTIC VEHICLES

BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

**WEEKLY CASH BUYERS DRAWS OPEN**
**MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM**
**FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM**

1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ON.

**CIA PUBLIC AUTO AUCTION & SALES**
**416 - 242 - 5052**
www.cialeasing.com



வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

**Param Gnana**
Sales Representative
HomeLife GTA Realty Inc.

www. thematuram.com

Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)

HomeLife Higher Standards
themathuram.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெற்றிக்களிப்பில் பாரதம் !!!
## விளையாட்டுத் தகவல்கள் - 142

கோப்பையைக் கைப்பற்றி லாகூர் கடாஃபி அரங்கில் குதூகலிக்கும் இந்திய அணியினர்.



பாகிஸ்தானுடனான ஒருதின தொடரை 3-2 எனக் கைப்பற்றி வரலாறு படைத்தது இந்தியா. பாகிஸ்தானில் தொடரை வெல்வது இதுவே முதல்முறை.

லாகூரில் நடைபெற்ற இறுதி மற்றும் 5ஆவது ஒருதினக் கிரிக்கெட் ஆட்டத்தில் பாகிஸ்தானை 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தனர் கங்குலி தலைமையிலான இந்திய அணியினர்.

294 ஓட்டங்களைச் சேர்த்தால் வெற்றி எனும் கடினமான இலக்குடன் ஆடிய பாகிஸ்தான் 47.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 253 ஓட்டங்களையே சேர்த்தது. முந்தைய 4 ஆட்டங்களைப் போல இறுதி ஆட்டமும் பரப்பாகவே இருந்தது.

லக்ஷ்மன் சதம்: முன்னதாக, விவிஎஸ். லக்ஷ்மனின் அபாரமான ஆட்டத்தால் 7 விக்கெட் இழப்புக்கு 293 ஓட்டங்களை சேர்த்தது இந்தியா. டாஸில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணிக்காப்டன் இன்சமாம் உல் ஹக், இந்தியாவை துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

இந்திய அணிக் காப்டன் கங்குலி இத்தொடர் முழுவதும் டாஸிலில் தோல்வியுற்றது குறிப்பிடத்தக்கது. பாகிஸ் தானுக்கு எதிராக அவர் தொடர்ந்து 9 முறை டாஸில் தோல்வியுற்றுள்ளார்.

ஆட்டத்தைக் காண பாகிஸ்தான் அதிபர் முஷாரப் அரங்கிற்குள் நுழைந்தபோது, சச்சின் அடுத்தடுத்து 2 பவுண்டரிகளை விளாசினார்.

மிக நேர்த்தியான ஆட்டத்தை ஆடிய டெண்டுல்கர் 37 ஓட்டங்களை சேர்த் திருந்தபோது, சமி வீசிய பந்தில் ஆட்டமிழந்தார். அதன் பிறகு உள்ளே வந்த கங்கலி, லக்ஷ்மனுடன் இணைந்து தொடக்கச் சரிவை சமாளித்தார். கங்குலி சிறப்பாகவே ஆடினாலும் இம்முறையும் அரை சதத்தை தாண்டமுடியவில்லை. Otuside off Stumpedக்கு வெளியே அக்தர் வீசிய பந்தை எதிர்கொண்ட கங்குலி, மோயின் கானிடம் பிடி கொடுத்தார். 64 பந்துகளில் 45 ஓட்டங் களைச் சேர்த்தார் அவர். கங்குலி, லக்ஷ்மன் ஜோடி 3வது விக்கெட்டுக்கு 92 ஓட்டங்களைக் குவித்தது.

லக்ஷ்மன் 107: லக்ஷ்மன் 56 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது 'பிடி'யிலிருந்து தப்பிப் பிழைத்தார். ரஸாக் வீசிய பந்தை விளாசினார் லக்ஷ்மன். ஆனால் உமர் 'பிடிக்க'த் தவறினார். இதனால் அவர் சதத்தை எட்டமுடிந்தது. 104 பந்துகளில் 107 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தார் லக்ஷ்மன். தொடக்க வீரர்கள் சோபிக்காத குறையைப் போக்கிய லக்ஷ்மன், மாலிக் வீசிய பந்தை விளாசியபோது, பந்து மிகவும் உயரே எழும்பியதால் ஆட்டமிழக்க நேரிட்டது. சமி எளிதாக 'Catch' செய்து அவரை வெளியேற்றினார். லக்ஷ்மனுக்கு இது 6 ஆவது சதம். அதே சமயம் இந்த ஆண்டில் அவர் பெறும் 4 ஆவது சதம் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை யிலான ஆட்டங்களில் சிறப்பாக ஆடிய திராவிட், இம்முறை 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சமி வீச்சுக்கே அவரும் பலியானார்.

37 ஆவது ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களைச் சேர்ந்திருந்தது இந்தியா. பின்னர் உள்ளே வந்த யுவராஜ் சிங் வழக்கம் போல விளாசினார். இருந்தாலும் விரைவிலேயே (19 பந்துகளில் 18 ஓட்டங்களுடன் விடைபெற்றார்.)

கடைசியில் பதானும், 'அதிரடி' மன்னன் பாலாஜியும் குறிப்பிடும்படியாக விளாசி அணியின் எண்ணிக்கையை உயர்த்தினர். ஒரு பந்தை கடினாக விளாசியபோது பாலாஜியின் Bat இரண்டாக உடைந்தது. பதான் 20 ஓட்டங்களுடனும், பாலாஜி 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். அதிகபட்சமாக முகமது சமி 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

அணியில் மாற்றம்: லாகூரில் நடைபெற்ற 4 ஆவது ஆட்டத்தில் பங்கேற்ற பாகிஸ்தான் அணியில் ஒரே ஒரு மாற்றம் மட்டும் மேற்கொள்ளப்பட்டது. ஷாஹித் அஃப்ரிதிக்குப் பதிலாக தௌபிக் உமர் சேர்க்கப்பட்டார். அதே சமயம் கடந்த ஆட்டத்தில் வெற்றி பெற்ற இந்திய அணியில் மாற்றம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

ஐ.சி.சி தரவரிசை: இந்தியாவுக்கு 5ஆம் இடம். பாகிஸ்தான் அணியை முந்தியது.

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரை வென்றதன் மூலம் தரவரிசையில் 5 ஆம் இடத்திற்கு இந்தியா முன்னேறியது.

இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே நடைபெற்று முடிந்த 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 3-2 என்ற நிலையில் வென்று தொடரைக் கைப்பற்றியது. இந்த வெற்றி யானது இந்திய அணிக்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியாகும். பாகிஸ்தான் மண்ணில் இந்திய அணி தொடரை கைப்பற்றுவது இதுவே முதன்முறை யாகும். இதுமட்டுமன்றி லாகூரில் நடை-பெற்ற 5 ஆவது போட்டியில் வெற்றி பெற்று தொடரை வென்றதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தர வரிசையில் பாகிஸ்தானை இந்தியா முந்தியது.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை 3-2 என்ற நிலையில் கைப்பற்றியதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் ஒருநாள் போட்டிக்கான தரவரிசையில் 107 புள்ளிகளுடன் இந்தியா 5 ஆம் இடத்திற்கு முன்னேறியது. 106 புள்ளிகளுடன் பாகிஸ்தான் 6 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டது. 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திற்குப் பின்னர் முதன்முறையாக ஒருநாள் போட்டி தரவரிசையில் இந்தியாவுக்கு பின்னால் பாகிஸ்தான் அணி தள்ளப்பட்டுள்ளது. இந்த தொடர் துவங்கும் முன்னர் பாகிஸ்தான் அணி 5 ஆம் இடத்தில் இருந்தது. இந்த தொடரை இழந்ததன் மூலம் ஒரு புள்ளி பின்தங்கிய நிலையில் பாகிஸ்தான் அணி உள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தரவரிசை

1. அவுஸ்திரேலியா (135 புள்ளிகள்)
2. தென்னாபிரிக்கா (113 புள்ளிகள்)
3. இலங்கை (109 புள்ளிகள்)
4. நியூசிலாந்து (109 புள்ளிகள்)
5. இந்தியா (107 புள்ளிகள்)
6. பாகிஸ்தான் (106 புள்ளிகள்)
7. இங்கிலாந்து (106 புள்ளிகள்)
8. மே.இ.தீவுகள் (100 புள்ளிகள்)
9. கென்யா (25 புள்ளிகள்)

**புதிய இலக்கை எட்டினார் கெய்னஸ்**

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் அனுபவமிக்க ஆல்-ரவுண்டரான கிரிஸ் கெய்னஸ் தென்னாபிரிக்காவுக்கு எதிராக முடிவடைந்த 2 ஆவது டெஸ்டின் போது புதிய இலக்கை எட்டினார். டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் துடுப்பாட்டத்தில் 3000 ஓட்டங்களையும், பந்துவீச்சில் 200 விக்கெட்டுக்களையும் வீழ்த்திய வீரர் என்ற பெருமையை கெய்னஸ் பெற்றார். சர்வதேச கிரிக்கெட்டில் இந்த இலக்கை எட்டும் 6 ஆவது வீரர் கெய்னஸ் ஆவார்.


**எஸ். கணேஷ்**

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆக்லாந்தில் நேற்று முடிவடைந்த 2ஆவது டெஸ்டில் முதல் இன்னிங்சில் 158 ஓட்டங்களை எடுத்ததன் மூலம் 3000 ஓட்டங்கள் இலக்கை கெய்னஸ் கடந்தார். நடைபெற்ற கடைசி நாள் ஆட்டத்தின் போது தென்னாபிரிக்க வீரர் நிக்கி போஜேவின் விக்கெட்டை வீழ்த்தியன் மூலம் பந்துவீச்சில் தனது 200 விக்கெட் இலக்கை கெய்னஸ் எட்டினார்.

இந்த இலக்கை இதற்கு முன் எட்டியுள்ள சர் கேர்பீல்டு சோபர்ஸ், இயான் போத்தம், இம்ரான்கான், கபில்தேவ், சர் ரிச்சர்டு ஹாட்லி ஆகியோரின் வரிசையில் தற்போது கெய்ன்சும் இடம் பெற்றுவிட்டது குறிப்பிடத்தக்கது. 22 வயதான கெய்ன்ஸ் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக எந்த போட்டிகளிலும் கலந்து கொள்ளாமல் இருந்து வந்தார். இந்த நிலையில் கடந்த டிசம்பர் மாதம் தான் மீண்டும் போட்டிகளுக்கு திரும்பினார் கெய்னஸ்.

டெஸ்ட் போட்டிகளில் மீண்டும் விளையாடுவதற்கான வாய்ப்பு கிடைத்தது தன்னுடைய அதிர்ஷ்டமே என்று கெய்னஸ் கூறி உள்ளார். 3000 ஓட்டங்கள், 2000 விக்கெட்டுகள் இலக்கை நோக்கி அடுத்து முன்னேறிக் கொண்டு இருப்பவர் தென்னாபிரிக்க அணியின் ஆல்-ரவுண்டரான ஷான் போலக் ஆவார். இதுவரை 334 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள ஷான் போலக் 3000 ஓட்டங்களை தொட இன்னும் 102 ஓட்டங்கள் தேவையான நிலையில் உள்ளார்.


NTE AUTO
New Trade Engineering Inc.


ஸ்காபரோவில் 13வது வருட தன்னிகரற்ற சேவை
உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.
Also Air Condition Service & Repair





SIVABALAN
416.750.1573
என். ரி. இ. ஓட்டோ இங்க்
151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON
IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH

YARLCAN
STEAM CLEANING
* DUCT CLEANING
* CARPET CLEANING
உங்கள் சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்-
மோகன்: (905) 887-7436
Cell: (416) 721-9709







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாமும் நமது இல்லமும்

184

## ராஜா மகேந்திரன்

### வீட்டின் விலை எங்கேபோகிறது


கனடிய பொருளாதாரத்தில் முக்கிய பங்குகள் வகிப்பவற்றுள் வீட்டு வியாபாரமும் ஒன்றெனக்கொள்ளலாம். நிலம், வியாபார நிலையங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் நாம் வசிக்கும் இடங்கள் கைமாறுவதால், பொருளாதாரத்திற்கு நன்மை ஏற்படுகின்றது. இம்மாற்றங்கள் நடைபெறுவதால், இத்துடன் தொடர்புள்ள பலர் நன்மை அடைவார்கள். எனவேதான் மூன்று நிலையிலுமுள்ள கனடிய அரசுகள் வீட்டுவியாபாரத்தை ஊக்குவிக்க முயற்சிக்கின்றன.




கனடிய மத்தியவங்கியின் ஆளுனர் திரு. டேவிட் டொட்ஜ் இவ் ஆண்டில் (2004) இரண்டாவது தடவையாகவும் வட்டி வீதத்தில் இறக்கம் ஏற்படுத்தியுள்ளார். இதனால் நிதிநிறுவனங்களும் முதன்மை வட்டிவீதத்தை (PRIME RATE) இறக்கியுள்ளார்கள். இதனால் மோட்கேஜ் வட்டிவீதம், கடன் வட்டிவீதம், கிறடிட் காட் வட்டிவீதம், வாகன வட்டி வீதங்களிலும் இறக்கம் ஏற்பட்டுள்ளது.

இப்பொழுது நடைமுறையில் இருக்கும் கனடிய மத்தியவங்கியின் வட்டிவீதம் கடந்த 40 வருடங்களில் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. பொதுவாக வட்டிவீதம் குறைக்கப்படுகின்றதென்றால் பொருளாதார நிலைமை நல்ல நிலையில் இல்லை என்பதே கருத்தாகும். அதுமட்டுமல்லாமல், பொருளாதாரம் மேலும் நலிவடையாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் வட்டிவீதம் இறக்கப்படுகின்றது.

மேலும் மத்தியவங்கி அதிபரின் கருத்துப்படியும், அனேக பொருளாதார வல்லுனர்களினதும் கருத்துப்படி, கனடிய வட்டிவீதம் இந்த ஆண்டுவரை குறைவாகவே காணப்படும் எனத் தோன்றுகின்றது. எனவே இந்தக்கால கட்டத்தில் வீடு வாங்குபவர்கள் Variable Mortgage Rate இல் வைத்திருப்பதால் பணத்தைச் சேமிப்பதுடன், கடன்பெற்ற முதலிற்கு எதிராக கூடியளவு பணத்தையும் செலுத்த வாய்ப்புகள் உண்டு. வட்டி வீதம் குறைவாக இருப்பதால் வீடுவாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், அதிகரிக்கின்றது. வாடகைக்கு இருக்கும் பலர், முதல்தடவையாக வீடுவாங்கும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இதனால் வீட்டின் விலையில் அதிகரிப்பு ஏற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அண்மையில் வந்த தகவல் தரவுகளின்படி 2004 பெப்ரவரி, இதுவரையுள்ள பெப்ரவரியில் ஆகக்கூடிய வீடுகள் விற்றமாதமாகக் காணப்படுகின்றது. பொதுவாக வீட்டுச்சந்தையில் வீட்டின் விலை அதிகரிப்பதும் பிற்பாடு குறைவதும் இயல்பாக காணப்படும். மேற்கத்தைய நாடுகளின் பொருளாதார அமைப்பு அவ்வாறே காணப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு விலை அதிகரிப்பதும், பிற்பாடு குறைவதும் இயல்பாக அவதானிக்கக் கூடியது. 1965ஆம் ஆண்டிலிருந்து Toronto Real Estate Board வைத்திருக்கும் வீடுவிற்றல், வாங்கல் சம்பந்தமான தரவுகளை அவதானிக்கும் போது, குறைந்தது 7-8 வருடங்களிற்கு ஒரு தடவை இந்த ஏற்ற இறக்கம் இருப்பதைக் காணலாம். 1985 இலிருந்து அதிகரித்த வீட்டு விலை 1989 இல் உச்சத்தை அடைந்தது. பிற்பாடு இறக்கம் ஏற்பட்டது. இவ் இறக்கம் 1996 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது. அப்புறம் 1997 இலிருந்து அதிகரிக்க தொடங்கிய வீட்டு விலை இன்றுவரை (March 2004) தொடர்கின்றது.




உதாரணமாகக் கொண்டால் 1996இல் குறைந்த சராசரி வீட்டு விலையாக 198,150 ஆகக்காணப்பட்டது. 2003 இன் சராசரி வீட்டு விலை $293,067 ஆக அதிகரித்தது. இதன் அதிகரிப்பு $94,917 ஆகும். கிட்டத்தட்ட 50% அதிகரிப்பு எனக் கூறலாம்.

இதனால் ரொறொன்ரோ பெரும்பாகத்தின் எல்லாபாகத்திலும் 50% அதிகரித்தது என்று கூறமுடியாது. சிலபாகங்களில் கூடுதலாகவும், சில பாகங்களில் குறைவான அதிகரிப்பாகவும் காணப்படுகின்றது. சராசரியாக 50% எனக்கொண்டால், ஆண்டிற்கு சராசரியாக 7% வீட்டுவிலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.




இந்த நிலைமை தொடருமா? இவ்வாறே வீட்டின் விலை அதிகரித்து செல்லுமா? முக்கியமான கேள்வி தொடர்ந்து வீட்டு விலை அதிகரிக்கும் என்று கூறமுடியாது. எனவே குறையும் என்று, கூறமுடியாது? குறையும். ஆனால் எப்பொழுது குறையத் தொடங்கும், குறையத்தொடங்கினால் எவ்வளவு காலத்திற்கு குறைந்து கொண்டுபோகும். இந்தக் கேள்விகளிற்கு வீட்டு வியாபார நிலைமைகளைப் பற்றி எதிர்வு கூறுபவர்களால் கூட, குறிப்பாக கூறமுடியாமல் உள்ளது. அடுத்த வருடத்தில் வட்டி வீதம் அதிகரிக்க தொடங்க வீட்டின் விலையில் மாற்றம் ஏற்படுவதை அவதானக்க கூடியதாக இருக்கும்.


இந்த ஆக்கம், பொருளாதார கண்ணோட்டத்தில் ஆராயப்பட்டது. எதிர்பாராத அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டால் (உதாரணம் செப்ரம்பர் 11, 2001) வித்தியாசமான வினாக்களுடன் விடைகள் ஏற்படும்.

Raja M. Mahendran, P. Eng.
Broker/ Owner
Office - 416- 321-6969
Direct: 416 315-9397
Email: raja@mahendran.ca

**Interest Rate**

| | |
|---|---|
| 5 YrsMortgage | 4.35% |
| 3 Yrs Mortgage | 3.10% |
| Prime rate | 4.00% |

# MORTGAGES



*Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below*

*LOW - LOW RATES AVAILABEL TO GET BEST RATE IN TOWN PL CALL: ANIL JOSHI*

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply






**For more information call:**

**Anil Joshi** at

**416.888.1072**

# கடன் தொல்லையா?

**Call : RAJ for consultation**
**Tel: 416-835-6695**



கடன்காரர்களின் தொந்தரவா? சம்பளக் கழிப்பீடு, வழக்குகள் மற்றும் கலெக்சன் ஏஜென்சீஸிடம் இருந்து விடுதலைக்கான அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

அழையுங்கள்: ராஜ்
**Tel: 416-835-6695**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'நோய் நீக்கி'

## வீட்டு வைத்தியம் (Self Heal)

அதிக கொழுப்புள்ள உணவு உடம்பில் அதிக நச்சுத்தன்மை கூடிய பிராணவாயு துணுக்குகளை (Free Radicals) உருவாக்கி அவை ஆரோக்கியமான கலன்களை அழித்துவிடுகின்றன. எனவே அதிக கொழுப்பு உணவு புற்றுநோயை உருவாக்கி ஆரோக்கியத்தை கெடுக்கும் என்கிறார் டாக்டர் கெயித் ப்ளோக் (Dr. Keith Block).

இந்த அதிக கொழுப்பு உணவு உடம்பில் அதிக பித்த அமிலத்தை (Bile Acid) உருவாக்கும் தன்மை வாய்ந்தது. இந்த பித்த அமிலம் புற்றுநோய்க் கலன்களை உருவாக்க வல்லவை. இந்த ஹோமோன்கள் மார்பக புற்று நோயை உருவாக்கி வளர்க்கும் தன்மை உள்ளவை. எனவே கொழுப்பை

### டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், PH.D வவுனியா, இலங்கை

உணவில் குறைத்தல் சாலச்சிறந்தது. ஒருவருக்கு தினம் 30சத வீதமே கொழுப்பு தேவைப்படும். எனவே உணவை அதற்கு ஏற்றவாறு உண்பது அவசியம் எனக் குறிப்பிடுகிறார் டாக்டர். நிக்சன்.

உணவில் அதிக நார்ச்சத்து புற்றுநோய் தீவிரமடைவதை தடுக்க வல்லது. பெருங்குடலில் தேங்கும் புற்றுக்கலன்கள் நார்ச்சத்தினால் இறுதியாக மலத்திற்குள் சேர்க்கப்பட்டு விரைவில் அகற்றப்படுவதால் அவை இரத்தத்தில் சேர்ந்து பெருகுவது தடுக்கப்படுகிறது எனக் குறிப்பிடுகிறார் டாக்டர். கெயித் ப்ளொக். எனவே அதிக நார்ச்சத்து உள்ள மரக்கறி, பழங்கள் அவரைவகை உணவுகள் புற்றுநோயைக் கட்டுப் படுத்தும் தன்மை வாய்ந்தவை.

மேல்நாட்டு வைத்தியமுறை - இதன்பிரகாரம் அறுவைச்சிகிச்சை மூலம் புற்றுநோய்கலன்கள் தேங்கிய கட்டிகளை அகற்றப்படுகிறது. அதிக சக்தியுள்ள மின் ஒளியாகிய Laser Therapy மூலம் சுற்றத்திலுள்ள பாதிக்கப்பட்ட கலன்களை எரித்தல். பிச்சுக்கட்டி ஒளிவீச்சு (Radium Rays Emanated from the Metal Pitchblende) மூலம் புற்றுக்களை சுட்டு அழித்தல் முதலிய சிகிச்சை முறைகள் கையாளப்படும்.

மாற்றுசிகிச்சை முறைகள் - அதிகமாக இந்த முறைகளால் மனதையும் உடம்பையும் திடப்படுத்துவதுடன் உடம்பில் உள்ள சக்தியைச் சமப்படுத்துவதே முக்கிய குறிக்கோளாக இருக்கும். இந்த முறைகளின்படி நோய் தோன்றுவதற்கு முக்கிய காரணமே உடம்பில் ஜீவசக்தி பேதப்பட்டுப் பல காலம் அப்படியே செயற்படுவதால் என்றே கருதப்படும். இந்த பேதத்தை நீக்கியதும் உடல் நிலையும் நோயும் விரைவில் நீங்கி சுயநிலைக்கு வந்துவிடும் என்பதே இவற்றின் கூற்றாகும்.

சித்தமருத்துவம் - இதன்பிரகாரம் உடம்பிலுள்ள வாத, பித்த, சிலேமம் ஒன்று, பாதி, கால் என்ற வீதத்தில் செயற்பட்டால் சுகமாக வாழலாம். இவை மாறுபட்டு செயற்பட்டால் நோய்கள் தோன்றும். அந்தப் பேதம் பல நாட்கள் தொடர்ந்தால் பலவித தசைவளர்ச்சிகள், கட்டிகள், மகோதரம் முதலியன தோன்றும். இதை சமப்படுத்த பலவித மூலிகைகள், பஸ்பங்கள், செந்தூரங்கள் பாவிப்பதுடன் பத்தியமும் கடைப்பிடிக்கப்படும்.

குறிநிலை, பி.பி. அழுத்து முறை - இதன் பிரகாரம் உடம்பிலுள்ள அத்தனை உறுப்பின் பி.பி.நிலைகளும் உள்ளங்கை, உள்ளங்கால் இவற்றில் உள்ளன. இவற்றை தினம் காலை, மாலை நன்கு அழுத்துவதால் அந்த உறுப்புக்கள் புத்துயிர் பெற்று பலவித நோய்களும் நீங்கும் என்பதாம். எந்த வைத்தியம் செய்யும் பொழுதும் இந்த முறையை கையாண்டு பலவித நோய்களையும் நீக்கலாம். (தொடர்ச்சி 2ஆம் பக்கம்)


mhc

**MOHAN HOMEOPATHIC CLINIC**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- ALLERGIES
- SKIN PROBLEM
- SEXUAL PROBLEMS
- RESPIRATORY PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- FOOT PROBLEM
- TREAT WITH MASSAGE THERAPY

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | |
|---|---|
| Cough | Flu |
| Depression | Anxiety |
| Asthma | Tonsillitis |
| Gout | Arthritis |
| P.M.S | Leucorrhea |
| Migraines | Hair Loss |
| Diabetes | Cystitis |
| Cancer | Prostatitis |
| Obesity Hemorrhoids | |
| Stumatitis | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/ 416-291-3022

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4



**வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?**

**FIREMAN LOFRANCO**
PERSONEL INJURY LAWYERS

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்




SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A MOTOR VEHICLE ACCIDENT
• FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY • SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH

**உங்களுக்குத் தெரியுமா?**

நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி, சம்பள இழப்பீடுகள் அத்துடன் $172,000.00 வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

நடந்த விபத்து உங்கள் தவறாகவிருப்பின் உங்களால் $172,000.00 வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

5255 YONGE ST, SUITE 1300, TORONTO - MISSISSAUGA - KITCHENER

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அமையங்கள்

**தீபன் - (416) 505-9804**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூறல்


## திருமணங்களின் பின்னால்

ஒவ்வொரு திருமணத்தின் பின்னாலும், ஒவ்வொரு கணவன் மனைவிக்குப் பின்னாலும் பல விடயங்கள் புதைந் துள்ளன, மறைந்துள்ளன. திருமணம் என்ற பந்தம், சமுதாயத்தின் ஒரு நிர்ப்பந்தத்தின் விளைவு. சமூக ஒழுக்காறுகளையும், குடும்ப ஒழுக்காறு களையும் நிர்ணயிக்கும் ஓர் அலகு. பல திருமணங்கள் இன்று தொடர்வதற்கான காரணங்களில் ஒன்று இந்த சமூக ஒழுக்காறுகளே. ஆனால் விவாகரத்தின் விகிதாசாரம் இன்று அதிகரித்து வருகிறது. இவ்வாறான திருமண பந்தங்களின் பின்னால் ஒளிந்துள்ளவை பற்றிய இருவிதமான பார்வைகளை இரு படங்கள் முன்வைத்துள்ளன.

ஒன்று - அண்மையில் ஒஸ்காரின் சிறந்த திரைக்கதைக்கான விருதைப் பெற்ற Lost in Translation.

மற்றையது 1990 ஆண்டிற்கான இந்திய தேசிய விருதைப் பெற்ற Drishti (Vision)

## Lost in Translation



God Father போன்ற திரைப்படங்களை இயக்கிய Francis coppola வின் மகள் Sofia Coppola நெறியாள்கை செய்துள்ளார். திரைக்கதையும் இவரே.



Whiskey விளம்பர படத்தில் நடிப்பதற்காக Tokoyoவில் தங்கியிருக் கும் நடிகருக்கும் Tokoyoவில் வேலை பார்க்கும் கணவனுடன் தங்கியிருக்கும் இளம் பட்டதாரி பெண்மணிக்கும் இடையிலான உறவே இப்படம். இருவரையும் இணைப்பதற்கான காரணங் களில் ஒன்று தனிமை. மற்றையது தங்களது துணைவர்கள் பற்றிய பார்வை.

ஜப்பானியர்களைப் பற்றியும் அவர்களது, கலாசாரத்தைப் பற்றியும், ஏன் அவர்களது உயரம் பற்றியும் நகைச்சுவை என்ற பெயரில் கேலி செய்யப்பட்டுள்ளது. இது காலம் காலமாக Hollywood படங்களில் நடைபெற்று வந்துள்ளது.

ஆனாலும் அமெரிக்க தத்துவார்த்த ரீதியாக குடும்ப முறையின் பின்னால் உள்ள அபாயங்களை பதிவு செய்துள் ளது. Bill Murray, Scarlett Johansson, Giovanni Ribsi ஆகியோர் பிரதான பாத்திரங்களில் நடித்துள்ளனர். இதற்கு சற்று மாறுபட்டு

## Drishti (Vision)

இதனை நெறியாள்கை செய்திருப்பவர் Govind Nihalani. ஒளிப்பதிவாளராக திரையுலகிற்கு பெங்களூர் Sri Jaya chandran Rajendra Polytechnio இல் இருந்து புகுந்த இவர் அரித் சத்யா, ஆக்ரோஷ், தமாஷ் போன்ற படங்களை இயக்கியுள்ளார். பிரபல இயக்குனர் சியாம் பெனகலின் பல படங்களுக்கு ஒளிப்பதிவாளாராக கடமையாற்றி உள்ளார்.

சந்தியா (Sandhya), நிகில் (Nikhil) என்ற தம்பதிகள், இவர்களது எட்டாவது திருமண நாளில் சந்தியாவுக்கு ராகுல் என்ற இசைக்கலைஞரின் அறிமுகம் கிடைக்கிறது. இந்த நட்பு உடலுறவு வரை செல்கிறது. ஆனாலும் சந்தியா ஒரு சில மாதங்களுக்குள் இவ் உறவை முறித்துக் கொள்கிறாள். மீண்டும் குடும்ப வாழ்க்கையில் தனது கணவன் குழந்தையுடன் ஐக்கியமாகிறாள்.

ஒருநாள், நிகில் தான், விந்தியா என்ற பெண்ணை காதலிப்பதாகவும், அவர்களுடன் தொடர்ந்து வாழ்வதற்காக, சந்தியாவை விட்டு வெளியேறுவதாகவும் கூறுகிறாள்.



சந்தியா எவ்வளவோ கெஞ்சியும் நிகில் விந்தியாவுடன் தனது புதுவாழ்க்கையை அமைத்துக்கொண்டார். விந்தியா சிறிது காலத்தின் பின்னர் அமெரிக்காவில் வேறு ஒருவரைத் திருமணம் செய்து விடுகிறாள். சந்தியா நிகில் இருவரும் நான்கு வருட பிரிவின் பின்னர், இப்பொழுது நண்பர்களாக சந்திக் கின்றனர். சந்தியா, ராகுலுடனான தனது உறவைப் பற்றி கூறுகிறாள். நிகிலிற்கு அது அதிர்ச்சியளிக்கிறது. அவன் கோபம் கொள்கிறான். "ஏன் இதனை என்னிட மிருந்து மறைத்தாய்" "நான், உண்மை யாகவும், நேர்மையாகவும் இருந்தேன்" எனக் கூறுகின்றான்.

## வானரன்

அவளது கருத்து "நான் எனது மனச்சாட்சிக்கு நேர்மையாக இருந்தேன். இந்த திருமணத்தையும், நிகிலையும் ஆழமாகக் காதலித்தேன். இவ்விரண்டும் எனக்கு அவசியமாக இருந்தது. நானும் எனது மனச்சாட்சிக்கும், உணர்வு களுக்கும் நேர்மையாக இருந்தேன்."

இதில் யார் சரி, யார் பிழை, திருமணபந்தங்கள், உறவுகள் பற்றிய பார்வை ஒன்றை பதிவு செய்துள்ளார். பல திருமணங்களில் ஆண்கள் இரண்டு, அல்லது மூன்று பெண்களை தமது பாலியல் தேவைகளுக்கு பயன்படுத்தவே விரும்புகின்றனர். நேர்மையற்றவர்களா கவும், துணிச்சலற்றவர்களாகவும் செயல் படுகின்றனர். குறிப்பாக யாழ்ப்பாண சமூகத்தில் பல ஆண்கள் விளிம்புநிலை பெண்களுடன் உறவு கொண்டுவிட்டு அவர்களை நட்டாற்றில் விட்டு விடுவது மரபாகவே உள்ளது.

இதில் நிதிலின் நேர்மையையும், சந்தியாவின் உணர்வின் நேர்மை களையும் எம்முன்னே வைத்துள்ளார். குடும்பம் உடைபடும் பொழுது பிள்ளையை வளர்க்கும் பொறுப்பு பெண் களிடமே செல்கிறது. கோவிந் நிதாலி குடும்ப அரசியலை விமர்சித்துள்ளார். Govind சமூகம் சார்ந்த திருமணங் களையும் அதன் வழக்காறுகளையும், நேர் எதிரே யதார்த்த சம்பவங்களுடன் மோதவிடுகிறார். ஒரு திருமணபந்தத்தின் இடையில் ஏற்படும் உறவுகள் ஒழுக்கரீதியற்றவையா? இதில் ஆணுக்கும், பெண்ணுக்குமான நியாயம் என்ன? இவ்விருவரும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கப்படுகிறார்களா?

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்


# SHAN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL



## பயிற்சி நிலையம்



**5 Lessons for $299**

**10 Lessons for $499 ( 1 Road Test Free)**

**20 Lessons For $899 ( Including 2 Road Test Free)**



சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: **Pl. Call: Harry / Thanga**

**Tel: 416-525-7958**

**Scarborough East End**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நகைச்சுவைத் தொடர்....



# ராசம்மா ராச்சியம்



**106**





உலகப்பு! உலகப்பு! யூ..நோ..வட்....
சிலோன் ஆக்கள் கனடாவுக்கு..விசா..
இல்லாமல்...வரலாமாம்....என்றபடி
மீனாவின் மகன்



ராசம்மாவும் உலகரும் ரூபனும் ரூபியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தது சாப்படாமலே செமித்தது போலிருந்தது. வட்.. நம்பேலாமல் இருக்கு என்றா ரூபி.



யேஸ் கனபேரோட கதைச்சனான். கனபேர் பாஸ்போட் இல்லாமல் விசா இல்லாமல் தானே கனடா வந்தவையாம். ஓ..யா.. ஏப்றல் பூல் என்றபடி சிரிக்க..எல்லாரும் சேர்ந்து சிரித்தனர்.



உலகண்ணை..உலகண்ணை..முருகேசற்றை பெண்சாதியை மோலுக்குள்ளை கண்டனான் என்றபடி வந்தா ஆட்டிலறி.
ரூபன், ரூபி ராசம்மா, எல்லோரும் புதிதாக தோன்று சூரியகிரகணம் பார்த்தது போல ஒன்றாக அன்னம்மாவைப் பார்த்தனர்.

முருகேசரும் மனைவியும் வயது 75உம் 70உம். பிள்ளைகளைக் கட்டிக்குடுத்தும், ஏதோ விதத்தல் குடும்ப பூசல், பேரப்பிள்ளைகளில் ஆரம்பித்தோ மருமக்களால் ஆரம்பித்தோ சிலவேளைகளில் தீர்வு காணமுடியாததாய்ப் போய்விடும்.



சொப்பிங் செய்ய வந்திருப்பா, என்று கதையை திசைதிருப்ப ராசம்மா தொடங்கமுதலே ஆட்டிலறி அன்னம்மா சொன்னா உலகண்ணை சொன்னா நம்பமாட்டியள் 2 மணித்தியாலம் நானும் அவவும் இருந்து காதைச்சனாங்கள் என்று அன்னம்மா சொன்னபோது உலகர், ராசம்மா, ரூபன், ரூபி கம்பீரம் படம் பார்க்கும் போது கறண்ட் நிண்டது போலிருந்தது.






**மனித வாழ்க்கையில் சண்டை சச்சரவுகள் பலவிதம்**

சின்னவயதில் பள்ளியில் படிக்கும்போதும் வளர்ந்ததும் வீதியிலும் திருமணமானதும் வீட்டிலும் விதவிதமான சண்டை. பொருளுக்காக, வீட்டுக்காக, பணத்துக்காக, சொத்துக்காக - சண்டையில் இது ஒரு ரகம். மன்றங்கள், கட்சிகள், இனமத மொழிச் சண்டை இதுவும் ஒரு ரகம். ஆறு அறிவுபடைத்த மனிதனின் நோக்கம் ஒருவிதம். ஐந்தறிவு




படைத்த மிருகங்களின் நோக்கம் ஒருவிதம். நாளை மனிதன் பால்கறக்க வருவானே என நினைத்து பசு இன்றே புல்லை மேய்கிறது.






இரவு வீட்டில் களவு போனால் நாளை எஜமான் அடிப்பானே, நன்றியில்லாத நாய் என பேசுவானே என நினைத்து பகலில் இடையிடை தூங்கி இரவில் கள்வன் வராமல் குரைத்தே காலம் கழிக்கிறது நாய்.




நான் கூடவாவிட்டால் மனிதன் எழுந்திருக்கமாட்டான் என கோழியும். தம் கடமையை தவறாமல் செய்யும் போது **நாளை நமதே...** என மனதில் பாடிக்கொண்டு அன்றைய பொழுதை வீணாக்குபவர் எத்தனைபேர்.





வீட்டிலும் நாட்டிலும் என்ன நடக்குது என்று தெரியாதவர் எத்தனை பேர். எலெக்சன் வருகுது எலெக்சன்வருகுது எங்கே? கனேடிய வானொலியில் வரப்போகும் கனேடிய எலெக்சன், ஆசிய வானொலியில் இந்திய எலெக்சன் இலண்டன் BBCயின் தமிழோசையிலும் இங்குள்ள அனைத்து தமிழ் வானொலிகளிலும் இலங்கை எலெக்சன் அமளிதுமளி. ஆனால் எதுவுமே தெரியாமல் சார்ஸ், பறவைக் காச்சல், மாட்டு வருத்தம் இவைகளைக் கூடத் தெரியாமல் இருப்போர் எத்தனைபேர்...




*- கலகலப்பு தீசன்*






## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?



வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள்.
முற்றாக ஒழிக்க அழையுங்கள்.



- No Spraying
- No Smelling
- No Moving



**Call: Kanthan** **Tel: 416-283-9538**






குழந்தைகள் அதிகநேரம் இன்ரர்நெற்றைப் பாவிக்கிறார்களா? அவதானமாயிருங்கள்

**இன்ரர்நெற் பாலியல் பயங்கரம்**

எம்.ஜி.ஆர் மறுநாளே பொன்னியின் செல்வன் நாவலைத் தந்து ஸ்கிரிப்ட் எழுதச்சொன்னார். இயக்குனர் மகேந்திரனின் நேர்காணல்

SPAM - தேவையற்ற மின்னஞ்சல் தொல்லை

அமெரிக்காவிலிருந்து ஆசியாவிற்கு தரைமார்க்கமாக செல்லலாம்?

**இப்போது அனைத்துத் தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கிறது**



**Neelam silk**

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்



பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்

"நீலம் சில்க்"

- *SONALIKA PURE SILK*
- *JARDHOSHI SATIN & CREPE SILK*
- *JAPAN CRYSTAL SILK*
- *JAIPUR CRYSTAL SILK*
- *VASUNTHARA NETWORK CREPE*

**T.P: 416-778-7455**
**Fax: 416-778-8484**
1453 GERRAD STREET, EAST
(INDIAN BAZZAR)

**T.P: 416-759-2002**
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EMBASSY GROCERY

## SRI LANKAN
## EAST - WEST INDIAN
## GROCERIES & SPICES

**மாபெரும் மலிவு விற்பனை**

**MARCH 26 தொடக்கம்**

*Million* லொட்டோவை வாங்கி நம்மவர் ஒருவர் மில்லியனரான எம்பஸி விற்பனை நிலையத்தில் உங்களுக்கும் அதிஷ்டம் காத்திருக்கின்றது.


உங்கள் வீட்டுத் தேவைகளோடு அதிஷ்ட தேவதையும் உங்கள் பக்கம் வரலாம். மலிவு விற்பனையில் பங்கு கொள்ளும் உங்களுக்கு மில்லியனராகும் சந்தர்ப்பத்தை அளிக்குமுகமாக *$75.00*க்கு அதிகமாகப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் *Million* லொட்டோ டிக்கட் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும். *(Except Atta & Dairy Products)*

**OPEN 7 DAYS A WEEK**

* LOTTO
* TTC TICKETS
* KEY CUTTING
* PHONE CARDS

ALSO AVAILABLE

(All sale items while quantities last)




**5200 FINCH AVE. E.,**
**# 101 & 102, SCARBOROUGH**
**(Finch & Middlefield)**
**TEL: (416) 332-8451**

**HomeLife GTA Realty Inc.,**
**Real Estate Broker**
1711 McCowan Rd.,Suite 206,
Scarborough, ON. M1S 3Y3.
Bus: (416) 321-6969 Fax: (416) 321-6963

**SHIVA SHARMAH**



வீடு வாங்க, விற்க

**(416) 666 5515**



சிவ சர்மா







BRAND NEW 2 STORY
DETACHD
4 BEDROOMS
3 WASHROOMS
WALKOUT BASEMENT




2 STORY DEATCHED
4 +2 BEDROOMS
3 WASHROOMS
NEW KITCHEN




SPACIOUS 2 BEDROOMS CONDO
2 BEDROOMS
2 WASHROOMS

**NEW CONDOS AVAILABLE IN SCARBOROUGH**
& MISSISSAUGA





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவம் (Leadership)

போட்டிகளையும், சவால்களையும், நெருக்கடிகளையும் கொண்டுள்ள இன்றைய உலகில் தலைமைத்துவம் என்ற எண்ணக்கரு காத்திரமான பங்கினை வகிக்கின்றது. டேவிட் கம்பல் என்கின்ற சமூக உளவியல் அறிஞர் தலைமைத்துவம் இன்று ஓர் இன்றியமையாத சமூக அம்சங்களில் ஒன்றாக காணப்படுகின்றது என்கின்றார்.

சமூகம் பல கூறுகளைக் கொண்டதாகவும் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்பட்டதாகவும் காணப்படுகின்றது. இவ் ஒவ்வொன்றும் திறமையாக செயற்பட்டு வெற்றியடைய வேண்டுமாயின் தலைமை என்பது அவசியமாகும். தலைமை என்பது ஒரு குழு நிகழ்ச்சியாகும். இது ஆதிக்கம், பணிவு எனும் இயல்புகளை சார்ந்து நிற்கின்றது. மனிதன் தனித்து வாழமுடியாது. இவனுடைய வாழ்வில் கூட்டு வாழ்க்கை, குழு வாழ்க்கையே முக்கிய பங்கு வகிக்கின்றது. எனவே பலர் தம்மை ஒரு குழுவாக உருவாக்கிக் கொள்ளும்போது அக்குழுவை கட்டுப்படுத்தி இயங்க வைப்பதற்கு தலைவர்கள் உருவாகின்றார்கள். தலைமை என்றால் என்ன என பார்க்கின்ற பொழுது ஒரு பொதுவான நோக்கத்தினை நோக்கி செயற்பட வைப்பதன் பொருட்டு தனிநபர் அல்லது குழு செல்வாக்கு செலுத்தி அவர்களை வழிநடத்தும் ஆற்றலே தலைமைத்துவம் எனலாம். இது ஓர் இயங்கும் செயல் முறையாகும்.



குழுவாழ்க்கையில் தலைவன் மையம் போன்றவன். ஆனால் பின் செல்வோர் இல்லையெனின் தலைவன் என்றொருவன் இருக்க முடியாது. பின்செல்வோர் மூன்று வகையினர் என சமூகவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆற்றல் மிகக் குறைந்தவர்கள் இவர்கள் இயல்பாக பின்செல்வோர் ஒருவகையினர். ஆற்றல்கள் இருந்தும் முன்னிற்க தயங்குபவர்கள் இவர்கள் ஆக்கப்பண்புமிக்க பின் செல்வோர் இன்னொரு வகையினர். தலைவன் தமக்கு பிடித்திருப்பதாலோ அல்லது தலைவனை பின்பற்றுவதால் தமக்கு சில சாதகமான விளைவுகளை அளிக்கக்கூடும் என்பதால் பின்செல்வோர் உணர்ச்சி வெளிப்பாடு காரணமாக பின்செல்வோர் ஆவார்.

தலைமைத்துவம் பல்வேறு வழிகளில் தோற்றம் பெறுகின்றது. இதனை நோக்கின்ற போது,

1. நியமனத்தலைமைத்துவம் - ஒரு குழுவிற்கு தலைவராக தெரிவு செய்யப்படுமிடத்து அவர் நியமிக்கப்பட்ட தலைவர் ஆவர். பொதுவாக அரச நிர்வாக சேவைகளில் இவ்வகையான தலைவர்கள் நியமிக்கப்படுவதுண்டு.

2. தெரிவுத் தலைமைத்துவம் - குழுவிற்குள்ளேயே அக்குழு அங்கத்தவர்களால் தேர்தெடுக்கப்படுவர். ஆலய பரிபாலசபைகளில், அரசியற் கட்சிகளில் இவ்வகையான தலைவர்களைக் காணலாம்.


3. கவர்ச்சிகரமான தலைமைத்துவம் - உணர்வுரீதிலான கவர்ச்சியினால் தன்னைப் பின்பற்றுவோரை நடத்துபவர்கள் இந்த வகையினர். மகாத்மா, கார்ள்மாக்ஸ், பிடல்காஸ்ரோ, தந்தை செல்வா போன்றவர்கள் கவர்ச்சிகரமான தலைமைத்துவத்தை கொண்டவர்கள்.

4. மரபுரீதியான தலைமைத்துவம் - சாதி, மரபு, செல்வம் என்பவற்றால் காலாதிகாலமாக உறுதி செய்யப்பட்ட தலைமைத்துவம் ஆகும். இதனை மரபுரிமையால் பெறப்பட்ட தலைமைத்துவம் என்றும் கூறலாம். மத்தியகால ஐரோப்பிய நிலவுடமை முறையில் மன்னரும் பிரபுக்களும் பெற்றிருந்த அந்தஸ்து இவ்வகையான அதிகாரமே ஆகும்.



இதனைவிட சமூகத்தலைவர்கள் என்று பண்ணையார், பஞ்சாயத்து தலைவர்கள் இதனுள் அடங்குவர். இனிநாம் தலைவனிடம் காணப்படும் இன்றியமையாத பண்புகளை நோக்குவோம். தலைவன் தான் எடுத்துக்கொண்ட முயற்சியில் வெற்றியீட்டும் வல்லமை, குழுஅங்கத்தவர்களின் விருப்பத்திற்கு மதிப்பளித்தல், அர்ப்பணிப்பு, முன்மாதிரிகை, விசுவாசம், நேர்மை, மனிதத்துவம் போன்ற ஆளுமை பண்புகளையும், இதனைவிட நுண்ணறிவு, பேச்சாற்றல், தொடர்பாடல், சூழ் நிலைக்கு ஏற்றவாறு செயலாற்றும் மதிநுட்பம், அதிகாரம் செலுத்தும் தன்மை, போதிய உடல்வலு, மனஉறுதி என்பன ஒரு நல்ல தலைவனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் ஆகும்.



தலைவனின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டுமெனில் ஒவ்வொரு தலைவரும் சமூக இலக்கினை நோக்கிய நகர்வில் அவ் இலக்கை அடைவதற்கான வழிமுறையை இனம் கண்டு கையாள வேண்டும். திறனறிந்து பகிர்தல் தலைவனின் கடமைகளில் ஒன்று. அதாவது ஒருவனை இனம் கண்டு அவன் இத்தகைய வேலைக்கு பொருத்தமானவன் என அவனிடம் அவ் வேலையை ஒப்புவித்தல். தலைவன் ஒரு வாயிற் காவலன் போன்றவர். குழுவிற்கு உள்ளேயும், வெளியேயும் நடைபெறும் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் அவரே பொறுப்பு. குழுவின் கட்டுப்பாட்டாளர் தலைவர். குழு அங்கத்தவர் மேல் ஒழுங்குநடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் அவருக்கு உண்டு.



தலைமைத்துவம் என்பது சமூகத்தை வழிநடத்தும் காரணிகளில் ஒன்றாகும். தலைவர்கள் பெற்றெடுக்கப்படுவதில்லை, உருவாக்கப்படுகின்றனர். ஒருவருக்கு சந்தர்ப்பம் கொடுக்கும் போது தான் அவர் தலைமைத்துவத்திற்கு ஏற்ற பண்புகளை பெறுகின்றார் என்கிறார் சமூக உளவியலாளரான Mann என்பவர். எந்தவொரு நடவடிக்கையும் தலைவனின் கீழ் செய்யும்போது அது நல்ல பலனை அளிக்கும். எனவே தலைமைத்துவம் என்பது மானிட வாழ்விற்கு அவசியமானதொன்றாகும்.

*ராஜசந்திரிகா சுபாகர்*
*B.A. சமூகவியல்*
*- நன்றி - மகுடம்*




**MANIKKANDAN**

**Take Out & Catering**

தமிழ் தாய் நினைவைக் கொண்டுவரும் தராதரமிக்க, கனடிய கோட்பாடுகளுக்கு அமைய எமது தயாரிப்புகளான சோறு, மரக்கறி, இறைச்சிக்கறி, கடலுணவு, கொத்துரொட்டி வகைகள், ரொட்டி, இடியப்பம், புட்டு, இட்டலி, தோசை, மசாலா தோசை, வடை, Rolls, Cutlets, Patties போன்ற பலவகை உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் **மணிகண்டன்.**

*Wedding or any Occasions*
*Special Deals Available*

- சுவை நிறைந்த பல்வேறு வகையான INDIAN SWEETS
- வீட்டில் தயாரிக்கப்பட்ட மாங்காய், தேசிக்காய் அச்சாறு

**இடியப்ப மெஷின் விற்பனைக்கு உண்டு.**

இல்லங்களில் நிகழும் பலவிதமான வைபவங்களுக்கும் தேவையான உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள

**மணிகண்டன்.** Pl. Call: Siva **416-283-1260**

*790 Military Trail , Unit 1A*
*Scarborough ON M1E 4P7*


விடுகதை


- துடி துடித்து இடி இடிக்கும்; சட சடவென்று படபடக்கும் அது என்ன?
  பட்டாசு
- ரையில் வளராதமரம்; தலைமேலே வளரும் மரம்; கிளை உண்டு; இலை இல்லை; அது என்ன? மான்கொம்பு
- அடி மத்தளம்; இலை பர்வதம்; குலை சிறிது; காய் துவர்ப்பு; பழம் தித்திப்பு அது என்ன? குலை வாழை.

- ஆர். நீற்றா

16 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 150



**இட - வல**

1. மறுமொழி
3. கால்வாய் (வல-இட)
4. புதுமை
6. காலணி (வல-இட)
7. ஆண்களின் காதணி
8. உடலின் மச்சம் (வல-இட)
9. மீறிச் செல்
10. சொத்து
11. சரி பார்த்தல்
12. இளகிய வெல்லம்

**மேல் - கீழ்**

1. ஆடை
2. நிலம்
3. விளிம்பு
5. நட்சத்திரம் ஒன்று (கீழ்-மேல்)
7. காணி, நிலங்களுக்கு செய்யும் ஒரு வகை ஒப்பந்தம்
8. தயிர் கடையும் கருவி (கீழ்-மேல்)
9. சேர் (கீழ்-மேல்)
10. தொடக்கம் (கீழ்-மேல்)
11. ஒரு எண் (கீழ் - மேல்)
13. ஓமத்தீ வளர்க்கும் குழி (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஈ | டு | கொ | டு | | ம் | க | நு |
| ர் | கா | | ப | | ய | | க |
| க் | | | ப் | | தி | ட | ர் |
| கு | னி | | சை | | த் | | |
| | த | | ஆ | சு | வா | க | ம் |
| து | த் | மு | | ட | | | ட |
| | னி | | ஒ | ர் | | | ண் |
| சீ | த | ன | ம் | | செ | க் | கு |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் April 28, 2004க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**149இல் வெற்றி பெற்றோர்**

1) S. Ragulan, Toronto
2) S. Rajaratnam, Etobicoke


* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
*அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
*வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!


(416) 267-0408 731 - 733 kennedy Road [Ken-Mark Plaza]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஆரோக்கிய வாழ்வு

N. செல்வசோதி

## எதைப்பற்றியும் கவலைப் படாமல் இருந்தால் இதயத்தைப் பாதுகாக்கலாம்

உடல் முழுவதும் சுத்தமான இரத்தம் பாய்ந்து கொண்டிருந்தால்தான் ஆரோக்கியமாக வாழ முடியும். இதற்கு இதயத்திற்கு போதுமான இரத்தம் போய்ச்சேரவேண்டும். அப்போதுதான் இதயம் சீராக இயங்கி அதனுடன் வரும் அசுத்த இரத்தத்தைச் சுத்தம் செய்து இரத்த நாடிகள் மூலமாக உடலின் எல்லா பாகங்களுக்கும் அனுப்ப இயலும்.



இதயத்திற்கு போதுமான இரத்தம் போய்ச் சேராதிருக்க பல காரணங்கள் உள்ளன. அன்றாட அலுவல்களில் இடையிடையே நிதானத்தை இழத்தல், அளவுக்கு அதிகமான பரபரப்பு, அதிகம் உணர்ச்சிவசமாதல், வெற்றி தோல்வி, இலாபம் நஷ்டம், வீண்வாக்கு வாதங்கள், ஒரே இடத்தில் அதிக நேரம் உடகார்ந்திருத்தல், உடல் பருமன் என்பனவற்றைக் கொண்டிருப்பவர்களின் இரத்த நாடிகள் / நாளங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

உடல் ஆரோக்கியத்திற்கு உடல் முழுவதும் சுத்த இரத்தம் பாயவேண்டும். இதற்கு இதயம் சீராக இயங்குவது அவசியமாகும். இதயம் சீராக இயங்க அதற்குப் போதுமான இரத்தம் வந்து சேர வேண்டும். இதயத்தின் ஒரு பக்கம் ஒரு இரத்த நாளமும் மறுபக்கம் ஒரு இரத்த நாடியும் இருக்கிறது. இதயத்தின் இடது பக்கமுள்ள நாளம் உடல் முழுவதிலிருந்து வரும் அசுத்த இரத்தத்தை இதயத்திற்குச் செலுத்துகின்றது. இதயம் அசுத்த இரத்தத்தை நீக்கி சுத்தமான இரத்தத்தை வலதுபக்க நாடி வழியே உடல் முழுவதும் பரவச் செய்கிறது.

எமது இரத்தத்தில் 78% சதவீதம் நீர்ப்பொருளும் 22 சதவீதம் திடப் பொருளும் இருக்கிறது. இதிலுள்ள திடப் பொருள்கள் புரோட்டின், உப்பு, கொழுப்பு, குளுக்கோஸ், இரும்புச்சத்துப் பொருட்கள் என்பனவாகும். இரத்தத்தில் சிவப்பு அணுக்கள், வெள்ளை அணுக்கள் என்பவற்றோடு வேறு ஒரு அணுவும் உள்ளது. உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியமானது வெள்ளை அணுக்கள். உடலில் தோன்றும் நோய்க்கிருமிகளை சூழ்ந்து கொண்டு அடித்து விரட்டுகிறது. மூன்றாவது அணு உடலில் இரத்தக் கசிவு ஏற்படும்போது அதனை உறையச் செய்கிறது.


இதயம் சீராக இயங்கினால் நாடித்துடிப்பு இயற்கையாக இருக்கும். இதயம் சீராக இயங்காவிடின் நாடி மிகவும் வேகமாகவோ அல்லது மெதுவாகவோ துடிக்கும். இதயம் சீராக இயங்கி நாடித் துடிப்பும் அளவுடன் இருந்தால் ஆரோக்கியமாக வாழலாம். இதயம் வயது வந்த மனிதனின் கை அளவு உள்ளது. நான்கு அறைகளைக் கொண்ட கூம்பு வடிவத்தில் உள்ள இதயம் சுமார் 300 கிறாம் எடையுடன் கடினமான தசையால் மூடப்பட்டுள்ளது. ஒருவருடைய வாழ் நாளில் இதயம் 125 கோடி முறை சுருங்கி விரிகிறது. அதாவது ஒரு நிமிடத்திற்கு 72 முறையும் ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் தடவையும் சுருங்கி விரிகிறது. இதயத்தைப் போல எந்த இயந்திரமும் தொடர்ச்சியாக ஆயுட்காலம் வேலை செய்வதில்லை.

இதயம் இரத்தத்துடன் பிராணவாயுவையும் (Oxygen) சேர்த்து இரத்த நாடிகள் மூலம் உடல் முழுவதும் பரவச் செய்கிறது. உடல் உறுப்புக்கள் சீராக செயல்படவும் அன்றாடம் ஏற்படும் உடல் மாற்றங்களுக்கும் இரத்தமும் பிராணவாயுவும் (Oxygen) உடல் முழுவதும் பரவிக்கொண்டே இருக்க வேண்டும். இதில் சிறுதடை ஏற்பட்டாலும் ஆரோக்கியம் பாதிக்கும்.

இரத்த நாளப் பாதிப்புடன் அன்றாட வாழ்வில் ஏற்படும் வேலைச்சுமை, உணர்ச்சிவசமாதல் என்பனவற்றுடன் துன்பம், துயரம், ஏக்கம் என்பனவும் சேர்ந்துகொண்டால் இதயம் சீராக இயங்காது. அத்துடன் இரத்த நாளங்களில் கொழுப்புச்சத்துக்கள் சேர்ந்து அடைத்துக்கொள்ளும் போது இரத்தம் பாய்வது தடைப்படும். அப்போது மூளையும் பாதிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து மாரடைப்பு தோன்றுகிறது. இத்தகைய அபாய நிலை ஏற்படுவதைத் தடுக்க இயற்கையான வழிகள் இருக்கின்றன. தினசரி வாழ்க்கையில் பரபரப்பு (Tension) அடையக் கூடாது. ஆத்திரமூட்டும் செயல் நடைபெற்றாலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதிர்ச்சி ஏற்படும் நிகழ்ச்சிகளை விலக்கவேண்டும். எதற்கும் கவலைப் படக்கூடாது. காப்பி, தேனீர் பருகுவதைக் குறைக்கவேண்டும். புகைத்தல், மது பானம் என்பனவற்றைத் தீண்டவே கூடாது. கொழுப்புசத்துள்ள உணவு களைக் குறைக்கவேண்டும். அத்துடன் காய்கறிகள், பழங்கள் என்பனவற்றை அதிகம் உணவில் சேர்த்து வரவேண்டும். மாதத்திற்கு ஒரு நாளாவது பட்டினி இருக்கவேண்டும்.

இவை தவிர உட்கார்ந்துகொண்டு வேலை செய்பவர்கள் காலையிலும், மாலையிலும் ஒரு கிலோ மீட்டர் தூரமாவது நடக்க வேண்டும். அத்துடன் தினமும் பத்து நிமிடநேரமாவது தனியாக அமர்ந்து மனத்தை முடிந்தவரை ஒரு நிலைப்படுத்தி தியானப்பயிற்சியில் ஈடுபட வேண்டும். அதனால் உடலும், மனமும் அமைதியடைந்து இதயத்திற்குப் புத்துணர்ச்சியைத் தருகிறது.

இறுதியாக எல்லாவற்றிற்கும் மேலாக பண்டைக்கால முனிவர்களாலும், யோகிகளாலும் நமக்களிக்கப்பட்ட யோகாசன பிராணாயாமம் பயிற்சிமுறைகள் இருக்கின்றன. இவற்றில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியோடு பழகி தினமும் பயிற்சி செய்து வந்தால் இருதயம் சம்மந்தப்பட்ட நோய்கள் எதுவுமின்றி நீண்ட ஆயுட் காலம் மிகுந்த ஆரோக்கியத்துடன் வாழலாம். இது உறுதி.




**பிள்ளை பராமரிப்பாளர் தேவை**

WARDEN & ELLESMERE பகுதியில் வசிக்கும் பெற்றோர் தங்கள் 2 வயதுப் பிள்ளையைப் பராமரிப்பதற்கு ஒருவரைத் தேடுகிறார்கள். உங்கள் வீட்டில் வைத்தே பராமரிக்கலாம். இப்பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

அழையுங்கள்: 416-443-2981



**SAYEE DAYCARE**

MIDLAND & LAWRENCE சந்திப்பில் 6 மாதக் குழந்தைகளிலிருந்து பிள்ளைகளைப் பராமரிக்கப்படும். 8 மணித்தியாலங்களுக்கு $8 மட்டுமே. மேலதிக தொடர்புகளுக்கு: SAYENE - 416-750-4354



**J DAYCARE**



- மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை
- சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

| | |
|---|---|
| 1 Hr. | $3.00 |
| Day | $15.00 |
| Week | $60.00 |

**தினசரி நடவடிக்கைகள்** * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு: Mrs.S.J. சௌந்தரநாயகம்

#7 Birchcrest Court (Finch / Warden) 416-502-3033




**SMILE**

- BUSINESS PLANS
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE

**RK CONSULTANTS**

**ACTION HONDA**

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



**புதிய பழைய HONDA வாகனங்களை ஈழத்தமிழ் மகன் சோதீஸ் இடம் பெறும்போது**

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.



This Month Special

**SPRING CLEARANCE SALE**


**416-704-1179**

**அலுவலக நேரம்**

Mon, Fri, Sat: 9 am - 6 pm

Tues, Wed: 12 noon - 9 pm

4334 Kingston Rd, Scarborough








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ தோழனாயிரு




ஒற்றுமைப் பறவை காகத்திற்கு தோழனாயிரு
பிரிவினை வாதியாய் இருக்கமாட்டாய்.

ஊரும் எறும்பிற்குத் தோழனாயிரு
சோம்பேறியாய் இருக்கமாட்டாய்

நீரில் நீந்தும் மீனிற்குத் தோழனாயிரு
எதிர், நீச்சல் போடாமல் இருக்கமாட்டாய்

கள்ளங் கபடமற்ற புறாவுக்குத் தோழனாயிரு
சமாதானத்தை நாடாமல் இருக்கமாட்டாய்






கருணையுள்ள மனிதருக்குத் தோழனாயிரு
மன அமைதியின்றி இருக்கமாட்டாய்

எல்லாம் வல்ல இறைவனுக்குத் தோழனாயிரு
இரக்கமின்றி இருக்கமாட்டாய்

நன்றி காட்டும் நாய்க்குத் தோழனாயிரு
நன்றியில்லாமல் இருக்கமாட்டாய்.

- திருமதி. நீற்றா பாலேந்திரா
(ரொறன்ரோ)

## நஞ்சுப் பை



நாகப் பாம்பின் கடிக்கு அதன் நஞ்சைக் கொண்டே முறிவு மருந்து ஒன்றை உபயோகிக்கிறார்கள். நாகத்தின் விஷப்பற்கள் நான்கு. அவை காளி, காளாத்திரி, யமன், யமதூதி என்பன. அந்தப் பற்களுள் உள்ள நஞ்சுப் பையிலிருந்து விஷம் வெளிவர, பல்லில் நுண்துளைகள் இருக்கின்றன. பாம்பு கடிக்கும் போது இந்த நுண்துளை வழியாக நஞ்சு பாய்ந்து, மனித இரத்தத்தில் சேர்கிறது.

### வேடிக்கை விடுகதைகள்

- மாமியார் வீட்டுக்குப் போனேன்; மாமியார் சாப்பாடு போட்டார்; இலையை எடுத்துப்போட்டே இருந்து சாப்பிடச் சொன்னார். அது என்ன இலை? கறிவேப்பிலை

- அடி அடி என்று அடித்து உரி உரி என்று உரித்து உள்ளிருப்பதை வைத்துக்கொண்டு வெளியே இருப்பதை எறிந்து விடலாம். அது என்ன?
புளியம்பழம்

## தூறல்

9ஆம் பக்கத்தொடர்ச்சி

திருமணத்தின் போலியையும், அதன் உண்மைகளுக்குமான உறவையும் உடைத்தெறியும் கோவிந், உள்ளார்ந்த, உளவியல் ரீதியான பார்வை ஒன்றை முன்வைத்துள்ளார். இறுதியான பார்வை யாளர்கள் அனைவரையும், விமர்சகர் களாகவும் மாற்றிவிடுகிறார்.

படத்தின் பார்வையாளர்களையும் பாத்திர மாக மாற்றியுள்ளார். அவர்கள் கதை யுடன் நகர்ந்து செல்கின்றனர். தங்களுடைய ஆசனங்களுடனேயே திரையரங்கை விட்டு வெளியேறுகின்ற னர். இந்தத் தன்மையை கோவிந் நிதாலி அனைத்துப் படங்களிலும் பார்க்கக் கூடியதாகவுள்ளது. படைப்புக் கும் பார்வையாளனுக்குமிடையே ஒரு நெருக்கமான உறவை இயல்பாகவே அமைத்தள்ளார்.

இதற்கு மாறாகவே Lost in Translation உள்ளது. ஒரு பக்க சார்பாக தன்மையை காட்டும் இப்படம். வெறும் கிளர்ச்சியூட்டலுக்கான காரணியாகவே மறுபக்கத்தை காட்டுகிறது. மறுபக்கம் ஒரு நிழல். அதன் குரல்களை தான் நாங்கள் கேட்கின்றோம். மனத்தையல்ல.

1980 ஆம் ஆண்டு கோவிந் கூறியதில் 10% கூட Sofia Coppola ஆல் கூறமுடியவில்லை. Hollywood இன் யதார்த்தம் கிளர்ச்சியை தூண்டுவது. அதன் தன்மையிலிருந்து மாறுபடாமல் படைத்துள்ளார்.

கோவிந் தனது படைப்புக்களை, தனது பார்வையுடன் மிக நேர்மையாக விமர்சனரீதியுடன் முன் வைப்பவர். அதனால் தான் அவரால் இவ்வாறான படங்களை படைக்க முடிகிறது. சந்தியாவாக டிம்பிள் கபாடியா மிகவும் சிறப்பாக நடித்துள்ளார். இவர் 1990 ஆண்டு சிறந்த நடிகைக்கான விருதை இந்திய அரசிடமிருந்து பெற்றுள்ளார். நிதிலாக சேகர் கபூர் நடித்துள்ளார்.

நாங்கள் அனைவரும் கட்டாயம் இப்படத்தை பார்த்து எங்களை ஒரு தடவை சுய விமர்சனம் செய்வது நல்லது.

## Bhopal Express



இந்தியாவில் போபால் நகரில் யூனியன் கார்பைட் தொழிற்சாலையில் ஏற்பட்ட நஞ்சு வாயு விபத்தில் இறந்தவர்களை பற்றியது. அமெரிக்காவை விமர்சிப்பதும், உணர்ச்சிகரமான காட்சிகளை காட்டுவதனாலும் சிறந்த படமாக முடியாது.

இவ்விபத்துக்கான முழுகாரணங்களும் விமர்சிக்கப்பட வேண்டும். இந்திய அரசின் பங்களிப்பு, நிறுவனத்தின் Safety ஐ அங்கீகரித்த இந்திய அரசு அதிகாரிகள், இதனை நடத்தும் உள்ளூர் தரகு முதலாளிகள் போன்றோர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவ்விபத்தின் கோரங்கள் முழுமையாக பதிவு செய்யப்படவில்லை. Drishti, Bhopal Express ஆகிய படங்களை Tuxedo Court இல் உள்ள N.N.Video மற்று Photo Past ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

அடுத்த தூறலில் - "Castro - Stone", "அம்மா நலமா".








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறுவை 15

'ஹலோ'
'ஐயா வணக்கம். அவசரமாய் ஒரு உதவி செய்ய வேணும்.'
'முடிந்தாற் செய்யலாம். சொல்லுங்கோ!'
"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்று தொடங்கும் பாட்டு வேணும் ஐயா.'
'கேளீர் அல்ல...கேளிர். அவசரம் என்கிறீர். எப்படி எடுக்கப் போகிறீர். எழுதிப்போட்டு Fax இல் அனுப்பட்டே?'
'என்னட்டை Fax இல்லை ஐயா. இப்ப ஒருக்கால் சொல்லமாட்டியளே, நான் எழுத...'
'அதுக்கென்ன, எழுதுங்கோ....யாதும் ஊரே யாவரும் கேளீர்...ஹலோ!...ஹலோ...'
'மன்னிக்கவேணும் ஐயா.....'
'என்ன இருந்தாற்போல சத்தத்தையே காணோம். என்ன நடந்தது?'
'எழுதிறதுக்குப் பேப்பர் பேனையைத் தேடினான் ஐயா. இந்த வீட்டிலை எதுவுமே வைச்சால் வைச்ச இடத்திலே கிடவாது. எடுத்த பொருளைப் பாவித்தபின் திரும்ப எடுத்த இடத்திலேயே வையுங்கோ என்று எத்தனை நாள் இந்தச் சனியனுகளுக்குச் சொல்லியிருக்கிறன். மூதேவியள் சொன்னாற் கேட்டால்தானே! நீங்கள் சொல்லுங்கோ ஐயா...'

'யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
காதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆதலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே....எழுதியாச்சே?'

## கவிஞர் வி. கந்தவனம்

'ஓம் ஐயா, இவ்வளவுந்தானே?'
'அவ்வளவுந்தான்'
'குறைவிளங்காமல் இதன் பொருளையும் கொஞ்சம் விளங்கப்படுத்தி விடுங்கோவன்'
'எமக்கு எல்லா ஊர்களுமே சொந்த ஊர்தான். எல்லாருமே சுற்றத்தவர் (கேளிர்) தாம். நன்மை தீமைகள் தாமாக வருவன. பிறரால் வருவனவல்ல. இன்ப துன்பங்களும் அவ்வாறே. காதலும் எமக்குப் புதிதல்ல. அது கருவுற்ற நாளிலிருந்தே தொடர்கின்றது. இந்த வாழ்வை இனிதென்று மகிழ்ந்ததுமில்லை. கோபித்துக் கூடாதென்று வெறுத்தது மில்லை. இடிமின்னலோடு பெய்கின்ற மழை (தண் துளி - குளிர்ச்சி பொருந்திய மழைத்துளிகள்) பெரிய இரைச்சலோடு ஆறாகப் பாய்கையில், அதன்வழி மிதந்து செல்லும் தெப்பம் (புணை) போல அரிய இந்த உயிர் விதிவழியே செல்லும் என்பதை ஆன்றோரின் நூல்களிலே கற்றுத் தெளிந்து கொண்டோம். அதனாலே நன்மையிற் சிறந்தவரை நாம் புகழ்தலுமில்லை. அல்லாதவரை (சிறியோரை) இகழ்தலுமில்லை.'



'நன்றி ஐயா.'
'ஒரு விடயம்...இந்தப் பாடல் மனப் பக்குவம் சம்பந்தமானது. இதனைப் படித்த பிறகேனும் பிள்ளைகளை சனியன் மூதேவி என்று ஏசாதிரும்'
'சரி ஐயா. மன்னிச்சுக் கொள்ளுங்கோ. வணக்கம்.'
'வணக்கம்.'

*பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்*
*சத்தியமும் வாங்கிப் போட்டாள் -*
*சகோதரரே*
*தாசிகள் நேசம் மோசமே - தொலை*
*பேசிகள் நேசம் வாழ்கவே!*


## DAY CARE



மாதம் தொடக்கம் 12 வயதுச் சிறுவர்களுக்கு சிறந்த பராமரிப்பு. ECA தகுதியும் பலவருட அனுபவமும் தேர்ச்சியுமுடைய ஆசிரியைகள் காலை 7:00 மணி தொடக்கம் மாலை 7:00 மணிவரை முழுநேர, பகுதிநேர (After School Program) உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ், சமயம், ஆங்கிலம் கற்பித்தல். BRIMWOOD BLVD JR PBLIC SCHOOL க்கு மாணவர்களை அழைத்துச் செல்லும் வசதிகளும் உண்டு. $2.00 per 1 HR.
#1600 Sandhurst Circle (Finch & McCowan.
தொடர்புகளுக்கு: MRS. S. SHANTHABAVAN-416-332-1837

## WINDOW COVERING

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

BLINDS
DRAPERIES AND
SHUTTERS
• Venetian Blinds
• Vertical Blinds
• Roller Shades
• Pleated Shades
• Cellular Shades

FREE ESTIMATE



*இருபத்தெட்டு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.*

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON


விபரங்களுக்கு: என். செல்வம்
**416.332.8482 / 416.419.9247 / 905.201.7733**



T Nitharashan
EQAO - Gr 6
All Subjects Level 4



R. Nithusha
EQAO - Gr 3
Math Level 4
Others Level 3



S. Abira
EQAO - Gr 3
All Subjects Level 4

## EQAOவில் எம் மாணவர் சாதனை பாரீர்

உங்கள் பிள்ளைகளும் சாதனை படைத்திட வேண்டாமா?
நாடுங்கள்

## வீவீ ரியூரறிங் சென்ரர்

| Bellamy / Ellesmere | Midlefield / Elson | Drew / Dixie |
|---|---|---|
| 1940 Ellesmere Rd, #16 Scarborough | 28 James Edward Drive Markham | 1808 Drew Rd Mississagua |


**EQAO** மாதிரி வினாத்தாள் (Model Test) வகுப்புகள்
**01-04-2004ல்** ஆரம்பமாகின்றது
4 மாதிரிப் பரீட்சைகள்,
2 Examination Seminar (By Canadian Teachers)
இடம்பெறும்
**Canadian National Mathematics League (Gr4 to Gr9)**
**GAUSS Contest**க்காண கணிதப் போட்டி வகுப்புகள்
**05-04-2004**ல் ஆரம்பமாகின்றன
தொடர்புகட்கு

## VV TUTORING CENTRE

**416-701-1763 / 905-471-3084**



V.Dinesh
EQAO Gr 6
Math Level 4, Reading Level 4
Writing Level 3



T. Balakumar
EQAO - Gr 3
Math, Writing Level 4
Reading Level 3



M. Mathura
EQAO - Gr3
All Subjects Level 4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



இறைவன் என்னை நேசிக்க விரும்புகின்றார் என்பதை உணரும்போது, நான் தன்னலமற்ற அன்பை அறிந்து கொள்வேன். இறைவன் உன்னை நேசிக்க விரும்புகிறார். இதற்கு மேலும், இன்னும் கூடிய அன்பைத் தருவாரா என்ற அவநம்பிக்கையுடன், அவரிடம் நீ கேட்கத் துணியாத அளவுக்கும் அதிகமான அன்பையும் அருளையும் உனக்குத்தர, உன்னை அபரிமிதமாக நேசிக்கும் ஈஸ்வரன், விரும்புகிறார். உனக்கு வழி காட்டிப், பாதுகாத்து, அத்தியாவசிய மானவற்றை எல்லாம் தந்து, அன்பையும் நலன்களெல்லாவற்றையும் உன்மேல் வர்ஷிக்க ஈசன் விரும்புகிறார். நீ

### லலிதா புருடி

நேசிக்கப்பட வேண்டும். ஆரோக்கியத்துடன் ஆனந்தமாயிருக்க வேண்டும் என்பது அவர் சித்தம். அமைதி நிரம்பிய உனக்கு மகிழ்ச்சி தரும் அனுபவங்கள் சித்திக்க வேண்டும் என்பது அவர் விருப்பம். பூரண திருப்தி நிரம்பிய நிறைவான வாழ்வு நீ வாழ வேண்டும் என்பது அவர் ஆசை. ஆனால் பிரச்சினை என்னவென்றால் இறைவன் தர விரும்பும் அன்பைப் பெற்றுக்கொள்ளும் தகுதி உனக்கில்லை என்ற உணர்வினால், நீயே அதைத் தடுத்துக் கொள்வதை உன்னால் நிறுத்திக்கொள்ள முடியுமா?

சிலவேளைகளில், துரதிஷ்ட அனுபவங்களின் தாக்கத்தால் நாம் ஒன்றுக்கும் உதவாதவர்கள், கொஞ்சங்கூடத் தகுதியில்லாதவர்கள் என்ற எதிர்மறை உணர்வு களை நாம் கைவிடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்போம். அல்லது வாழ்க்கையில் எமக்கேற்பட்ட பிரச்சினைகள் துரதிஷ்டங்களைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, அவை இறைவன்

எமக்களித்த தண்டனைகள், இறைவன் எம்மை மறந்துவிட்டதற்கு ஆதாரங்கள் என மறுகுவோம். ஆம்! இப்போதிருப்பதைவிட உயர்ந்த நிலையை அடைவது தான் உனது குறிக்கோள். நீ உண்மையில் எப்பேர்ப்பட்ட பேர்வழி என்பதை நன்கறிந்த ஆண்டவன், உன்னை, நீ இப்போதுள்ளபடி, நிச்சயம் அப்படியே ஏற்றுக் கொள்வார். உனது கடந்த காலச் செயல்களுக்கும் வருங் காலத்தில் எப்படிச் செயற்படுவது என்பதைப்பற்றியும் நீ குழம்பிக் கொண்டிருக்கலாம். நீ என்ன குற்றத்தைப் புரிந்திருந்தாலும் தனது அருள் உன்பக்கமிருக்கும் போது உன்வாழ்வு சீரடையும் என்பது இறைவனுக்கு நன்கு தெரியும்.



ஆமாம்! கடவுள் உன்னை விரும்புகின்றார். அவருக்கு உன்னிடமிருந்து ஒன்றுமே தேவையில்லை. இறைவன் உன்னிடம் ஒன்றையும் கேட்கவில்லை. உனக்குள் நிறைந்திருக்கும் உன் உள்ளார்ந்த சக்தியின் வளர்ச்சியின் உச்சத்தை நீ எட்டிப்பிடித்து வெற்றியடைய வேண்டும் என்பது இறைவன் விருப்பம். உனக்குள்ளிருக்கும் அந்தச் சக்தி என்ன தெரியுமா? அதுதான் இறைவனின் அன்பு! இறைவன் உன்னை விரும்பி நேசிக்க, பிரார்த்தனை, விரதம், யாத்திரை வேறு ஏதேதோவெல்லாம் செய்ய வேண்டும் என்று நீ இது வரை நம்பியிருக்கலாம். உனது நிஜமான ஸ்வரூபத்தை ஆண்டவன் இன்று பார்க்க அநுமதிகொடு. உன் வாழ்வில் நீ அநுபவிக்க விரும்பும், அமைதி, இன்பம், தைரியம், சக்தி, தாராளம் சகலதுமாகிய இறைவன், நீ யாசித்ததும் உன்னிடம் கட்டாயம் வருவார். ஆகவே இன்று, நீ அவற்றையெல்லாம் இறைவனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளும் நாளாக மலரட்டும். இறைவன் என்மேல்

பொழியும் அன்பை நான் அறிந்து, அநுபவித்து, பெற்றுக்கொள்ளும் நாள் இன்று தான்.

மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் - 905-624-9617











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க



ராஜா மகேந்திரன்

# Raja M. Mahendran, P.Eng

Brker / Owner

Direct:(416) **315-9397**



**HOMELIFE/GTA Realty Inc.,** Real Estate Broker
1711 McCowan Rd.,Suite 206, Scarborough, ON. M1S 3Y3.
TEL: (416) 321-6969 FAX: (416) 321-6963
email: raja@mahendran.ca

வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க, விற்க... வீடு வாங்க

## Moringside/Ellesmere



Stacked Town home
2+1Bedrooms
2 Washrooms
1 Kitchen

*Asking only $ 134,900*

## MARKHAM/STEELS



DETACHED HOME
3 Bedroom 3 Washrooms
Close To Mall, Library, TTC,Etc
Must see $$$ on upgrades

## LAWRENCE/MOSSBANK



Detached Sidesplit
Huge home 4+1 bedrooms
4 Washrooms 2 Kitchens
Finished BSMT With 2 Large Bedrooms

## COFFEE SHOP IN NEWMARKET

*$10,000 Weekly sales,*
*Rent 5800/mthy*
*Good income, Good Potential*

**Asking only $139,000**

## MARKHAM / EGLINTON

Spacious
2 Bedrooms Condo
2 Washrooms
Excellent Location
Great View



Asking $144,900


## NEILSON / MCLEVIN



*Asking $244,900*

Detached Back split
4+1 Bedrooms
3 Washrooms
2 Kitchen

## MARKHAM/KINGSTON



*Asking $289,900*

Detached Back split
3+2 Bedrooms
3 Washrooms
2 Kitchen
Separate entrance

## *IN MARKHAM*



*Asking $474,900*

New Detached Home
4 + 2 Bedrooms
5 Washrooms
Finished Basement
Separate Entrance


BRAND NEW CONDOS FOR SALE BY
**WELL KNOWN BUILDERS**
1BED ROOM & 1+DEN/2BEDROOMS & 2+DEN
3BEDROOMS & 3+DEN

ONLY $139,000

AFFORDABLE PRICE
PRICE STARTING FROM
FIRST HOME BUYERS ONLY 5% DOWN

## HOUSE FOR RENT

**HWY 7/ LESLIE**



3Bedrooms
2 Washrooms
1 Kitchen
Large Living Room

Rent $1475

## PHARMACY/LAWRENCE



DETACHED BUNGALOW
3 +2 Bedrooms
2 kitchens
Separate Entrance
**$$$ Lots of Upgrades**

*Asking $359,900*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)


**Answers to Tutorial 143** March 15, 04



Ans. 1. The number in an unshaded square is obtained by adding the number connected to it from the row above, (The “11” in one) Row2 (11) 6 + X, X + 7,
Row3 11 + (6 + X) = 17 + x and (6 + x) + (x + 7) = 2X + 13
Row4 17 + X + (2X + 3) = 3X + 30 = 60,
∴ X = 10

Ans. 2. In a non leap year, there are 365 days which is 52 weeks plus one day. In a leap year,there is one extra day or 52 weeks plus 2 days. Jan. 1, 1986 —> wednesday. Jan.1, 1987 Thursday. Jan. 1, 1998 on Friday & Jan. 1, 1989 on sunday ( since 1988 leap year) Jan. 1. 1990 ——> Monday Jan. 1, 1991 on Tuesday & Jan. 1, 1992 on Wednesday.

Ans. 3 Lt $x \to 5/2$ !2x-5!(X+10)/ (2x-5) !2x-5! = 2x - 5 therefore $x \geq 5/2$
Lt (2x - 5) (x+1)/ 2x-5 = Lt $x \to 5/2$ (x+1)
!2x-5! = - (2x - 5) ;x < 5/2
Lt -(2x -5) (x + 1)/ (2x - 5) = - (x+1)
therefore Lt does not exist




Ans. 4. Since Dis the x inter of AD, D = (1,0)
Thus D C = 12 --Slope of AD = √3. So AC = 12 √3
and <ADC = 60 deg since BD bisects <ADC,
then <BDC = 30deg. and ΔDBC is 30 - 60 - 90 Thus
BC = 12/ √3 = q

## Tutorial - 144

1). Show using the properties of limits, that if Lt f (x)$_{x \to 5}$. = 3 then Lt $_{x \to 5}$ $x^2$ -4 / f (x)= 7.

b. If Lim f (x) = 3, use the properties of limit to evaluate
lt $_{x \to 4}$ $[f(x)]^2 - x^2 / f(x) + x$

2). Two circles of radius $18^{1/2}$(sq. root 18) are tangent to the graph $y^2 = 4x$ at the point (1,2). Find the equation of these two circles.

3. A sailor climbs a mast at 0.5m/ sec. on a ship travelling North at 12m/ sec. while the current flows east at 3 m/ sec. What is the speed of the sailor relative to the ocean floor.

4 . A car is 260m North and a truck 170 m west of an intersection. They are both approaching the intersection, the car from the north at 80km/ h and the truck from

*BY. MR. S.F.XAVIER (Teacher)* *TEL: 416-431-6774*

## நூல் தொகுப்பு - அறிவித்தல்

அனைத்துத் தமிழ் மக்களுக்கும் ஊடகவியலாளருக்கும் அன்பான வேண்டுகோள்!

தமிழீழ மண்ணில் 'இந்திய அமைதிப் படையின்' (1987-1990) காலப்பகுதி தொடர்பான இலக்கியப் பதிவுகள் கட்டுரைகள் ஆகியவற்றைத் தொகுத்து வெளியிடவிருக்கிறோம். இதுவரை வெளியிடப்பட்டவை மற்றும் வெளிவராது கையெழுத்துப்படிகளாக உள்ளவைகள் யாவையும் அனுப்பி, தமிழர் வரலாற்றின் முக்கிய காலகட்டத்தினைப் பதிவு செய்யும் செயற்பாட்டில் உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இத்தொகுப்பு ஆவணி 2004 முடிவில் நிறைவு பெற இருப்பதால் அதற்கு இருகிழமைகள் முன்பாகக் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்கவும்.

முகவரி: OLKAAR, 73 Flora Dr., Toronto, ON, M1P 1A5, Canada
மின்னஞ்சல் : tamilvoice@hotmail.com
- ஒல்கார் அமைப்பினர்


கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லி கல்லூரி பழைய மாணவர் ஆசிரிய சங்கம் கனடா கிளை நிதி உதவிப் படக்காட்சி

விஜயகாந்த், பிரபு தேவா, வடிவேல் நடித்த


**எங்கள் அண்ணா**



**டொலர் 5 மட்டுமே**

இடம் - Elane Cinema
(சங்கானைச் சந்தைக் அருகில்)
2800 Eglinton Ave. E.
நேரம் - பிற்பகல் 1.30 மணி, சனிக்கிழமை
காலம் - எதிர்வரும் சித்திரை (April) 03ஆம் திகதி 2004

தொடர்புகளுக்கு - கமலா - 905-944-1611, சாலா - 905-477-4558, குமார் - 416-816-4970, சிவா - 905-946-1498, கந்தையா - 416-496-0873, சதா - 416-291-8500, இலங்கேஸ்வரன் - 416-567-2353



**TUITION**

உங்கள் பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்விற்கு இன்றே

Teachers:
**S. Sivakumar**, M.Sc (Canada), M.C.S.E., A+
**S. Sivakumaran**, B.Sc (Hon), Dip-in Ed., MA (UK)
**S. Vinotha**, C.G.A

*Math, Chemistry, Physics, Accounting, Calculus, Algebra/ Geometry, Finite*


**அத்திவாரமிடுங்கள்!!**

**From Grade 5 to University**

**College:** Calculus, Linear Algebra & Geometry, Accounting
University: Calculus I & II, Fundamental Mathematics


தொடர்புகளிற்கு: **Kumar -(416)282-1421 / (416) 335-5595 / (416) 835-5806 Kennedy & Ellesmere, Morningside & Ellesmere**

**TUITION**



* Chemistry > Gr.13
> Gr. 11 * Physics
Gr. 13 * Finite
* Algebra & Calculus > Gr. 13

* Maths New Curriculum for Grade 12 Geometry & Discrete Mathemetices, Universict preparation இவற்றுடன் OAC பாடங்கள். கனேடிய கல்வி அனுபவம் பெற்றவரால் நடத்தப்படுகிறது. **NEILSON / MCLEVIN**
PL. CALL: Mr. & Mrs. Sharma, (416) **724-8336**



**TUITION**

அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDERGARDEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படும்.

**PL. CALL: 264-9471**

**ENGLISH & MATH TUITION**

UNDERTAKES FOR GRADES 2 TO OAC (GR. 12)
BY
(EXPERIENCED LECTURES WITH WIDE EXPERIENCE)
IN
ENGLISH (Grammatical/ Spoken/ Written)
AND
Maths from Gr.2 to OAC & Gr. 12.
Groups of 4 and indivitual classes available for all grades.
Special groups of 4 and individual classes available in
(1) Geometry & Dis Mathematics (2) Advanced Functions & introductory Calculus
(Separate group classes available for girls only)
CONTACT: **416 - 431- 6774 (Markham & Ellesmere)**


## நூல் வெளியீட்டு விழா

*அன்புடையீர்!*

*“ஆழியவளை - யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்” எனும் ஆய்வு நூலின் வெளியீட்டு விழா ஏப்ரல் சனிக்கிழமை 17, 2004 அன்று மாலை 6:00 மணிக்கு, ஸ்காபுறோ சிவிக்சென்ரர் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது. இந்நூல் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் சமூக மானிடவியல. கற்கும் மாணவர்கள. துணைநூலாக வாசிக்கத் தகுந்தது என அறிஞர்கள் தெரிவித்துள்ளனர். பேராசிரியர் தொ. பரமசிவனின் அணிந்துரையும், பேராசிரியர் கா. சிவத்தம்பியின் முன்னுரையும் அடங்கியுள்ளது.*

*நடைபெறும் இடம் : Scarborough Civic Centre (Council Chamber)
150 Borough Drive, Scarborough, ON.*

*வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பித்து ஆதரவளித்துப் பயன்பெறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

*நூலாசிரியர்: க. முத்துராஜா, B.A.*
*ஒல்கார் மாணவர் அமைப்பு-ரொறொன்ரோ*
*தகவல்களுக்கு: 416-783-4809*


**தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்**

**ரவி நடராஜா**



**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)

* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும். * உரிய இழப்பீடுகள் * மற்றைய இழப்பீடுகள் * விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

**(416) 245-6555**
**2095 Weston Road, Suite 203, Toronto, ON**
**(416) 755-2801**
**2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாங்க, விற்க





சசி செல்வரட்ணம்

Sasi Chelvaratnam

Sales Representative

Cell: (416) 725-1125

**HomeLife GTA** Realty Inc., Real Estate Broker

1711 McCowan Rd.,Suite 206,
Scarborough, ON. M1S 3Y3.
Bus: (416) 321-6969 Fax: (416) 321-6963

**Asking Only$478,400**



**IN MARKAHAM**
Spacious detached Home
4 Bedrooms
3 Washrooms
Excellent Location
Tons of Upgrades
Must Be Seen To Appreciate

**FOR SALE**
**SCARBOROUGH**
இல் நல்ல
நிலையில் இயங்கிக்
கொண்டிருக்கும்
புடவை மாளிகை
விற்பனைக்கு உண்டு.

**MARKHAM/FINCH**
Wow! Well Maintained Clean House
Spent $$$ On Upgrades
Excellent Location
3+2 Bedrooms
2 Full Washrooms



Asking Only $255,000

சகலவித Mortgage வசதிகளும் செய்து தரப்படும்
5 Years Closing Rate 4.4%
5 Years Variable Rate 3.3%

***Asking only $ 189,900***



**McCowan/Steeles**
Spacious, Corner Unit
2+1 Bedrooms Condo
2 Washrooms
Excellent Location
Great View

***Asking only 429,000***



**IN MARKHAM**
BRAND NEW 2 STORY
DEATCHED HOME
Tones of upgrades
Double Door Entry
4 Bedrooms
3 Washrooms

**Asking Only $144,900**



**MARKHAM / EGLINTON**
Spacious
2 Bedrooms Condo
2 Washrooms
Excellent Location
Great View

**Asking Only$289,900**



**NEILSON/MCLEVIN**
Detached Back split
4+1 Bedrooms
3 Washrooms
2 Kitchens

# *New Kalyani Catering & Take out*

# OPENING SOON



திருத்த வேலை காரணமாக
தற்காலிகமாக பூட்டப்பட்டிருக்கும்
'நியூ கல்யாணி' மிக விரைவில்
திறக்கப்பட இருக்கின்றது.

**292 Markham Road, Scarborough, ON**

**Tel: 416-509-2454**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BASEMENT FOR RENT

MIDDLEFIELD & FINCH
1 LARGE BEDROOM BSMT APT. FOR RENT. LIVING ROOM, KITCHEN, SEP. ENTRANCE. RENT $550. CLOSE TO ஐயப்பன் கோவில், TTC, STORES, ETC.
PL. CALL: 416-293-1401

******************************************

WARDEN & ELLESMERE
NEWLY DONE 2 BEDROOM BSMT FOR RENT - BUNGALOW HOUSE. SEP. ENTRANCE. HARDWOOD FLOOR UNDER THE CARPET, 4 PC WASHROOM. CABLE, PARKING, UTILITIES INCLU. AVAIL IMMEDIATELY. CLOSE TO TTC, HWY 401, MALL, PUBLIC & CATHOLIC SCHOOLS, STORES. தொடர்புகளுக்கு: 416-510-6932

******************************************

MORNINGSIDE & FINCH
